337

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 27 | நள ஹூ ஆவணி மீ 1௨ [17—8—76] | இதழ் 8

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# திருவியலூர் உய்ய வந்த தேவநாயனுர்

அருளிய

# திருவுந்தியார்—உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை

(மலர் 27 இதழ்-7 பக்கம் 340-ன் தொடர்ச்சி)

துரியம் கடந்தவித் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதென் றுந்திபற
துறந்தார் அவர்களென் றுந்திபற 32

பிருதிவி முதல் நாதமீறாகச் சொல்லப்படுகின்ற முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, ஆண்மபோதம் முற்றும் இழந்து, அன்புருவாய் நிற்கின்ற சிற்பரச் செல்வர்களுக்குச் சாக்கிராவத்தையே, கருவி கரணங்களோடு தோயாமல் மன மிறந்து நின்று, மனம் வாக்குக்கெட்டாத நின்மல துரியாதீதமாய்ச் சிவபோதமாய் நின்றது. இவர்களே ஞானனுபூதிமான்களாகிய உண்மைத் துறவிகள் ஆவார்கள்.

உயிர்கள் அடையும் அவத்தைகள் கேவலம், சகலம், சுத்தம் என மூன்றாகும் கேவலத்தில் உயிர்களுக்கு உடம்பு இல்லை. கலை, வித்தை, அராகம் ஆகிய தத்துவங்களால் தரப்படும் தொழில், அறிவு இச்சைகள் இல்லை. சித்தம், புத்தி, அகங்காரம், மனம், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள், தன்மாத்திரைகள், பூதங்கள் ஆகிய கருவிகள்இல்லை போகத்தை நுகரவேண்டுமென்னும் கொள்கையில்லை. பிறப்பு இறப்பு இல்லை. ஏகதேகியாதல் இல்லை. சகலத்தில் உயிர்களுக்கு மேலே இல்லை என்று குறிக்கப்பெற்ற எல்லாம் இருக்கும். சுத்தத்தில் உயிர்களுக்கு இருவினையொப்பு மலபரிபாகம், சத்திநிபாதம், குருவருள், ஞானசாதனப் பேறு, மும்மல நீக்கம், ஞானப்பெருக்கம் ஆகியஏதுக்களினுல் முத்திப்பேறுசித்திக்கும்

கேவலாவத்தையில் செம்பிற் களிம்பு போன்ற ஆணவ மலக் கட்டினுல், தனது வியாபகமான சேதனத் தன்மை ஒரு சிறிதும் விளக்கமுறாது. இருளிடைப்பட்ட கண்ணொளியைப் போலவும், இருட்டறையில் கட்டுண்ட குருட்டுக்குழவியைப் போலவும் ஆன்மா கிடந்தது பின்னர் சகலாவத்தையில், பரம காருணிதியாகிய சிவபெருமானது பெருங்கருணையால், மண் முதல் நாதமீறாகிய தத்துவக் கூட்டங்கள் வந்து பொருந்தி உபகாரம் செய்ய, விளக்கொளியுடன் கூடிய கண் ஏகதேச விளக்கம் பெற்றிருத்தல் போல, தநுகரணாதிகளால் ஏகதேச அறிவு விளக்கம் பெற்றிருக்கும். கேவல சகலங்கள் நீங்கிய சுத்தாவத்தையில், கதிரவனொளியோடு கூடிய கண் இருளால் மறைக்கப்படாமலும், விளக்கொளியின் உதவியை விரும்பாமலும், அக்கதிரவனொளியினாலேயே முழு விளக்கம் பெற்றிருத்

தல் போல, சிவபெருமானது அருள் ஞான ஒளியினுல் பாசப் பற்று அறவே நீங்கி, மாயாதநுகரண உதவியைச் சிறிதும் விரும்பாது, வியாபக அறிவு விளங்கப் பெற்று, இம்மையி லேயே நித்தியமான சிவப் பேற்றைப் பெற்றிருப்பது, நின்மல சாக்கிராதீத அவத்தையுடைய பரம ஞானியரது இயல்பு.

இவர்கள், ஒருதொழிலைச் செய்தாலும் பயன் கருதாது செய்வார்களாதலின் பாலர் குணமுடையாரென்றும் விருப்பு, வெறுப்பின்றிச் செய்வார்களாதலின் பித்தர் குணமுடையவ ரென்றும், தம்மை மறந்து செய்வார்களாதலின் பிசாசர் குண முடையவரென்றும் சொல்லப் பெறுவர். பயன் கருதாது செய்வது மாயாமல நீக்கத்தையும், விருப்பு வெறுப்பின்றிச் செய்வது கன்மமல நீக்கத்தையும், தன்னை மறந்து செய்வது ஆணவமல நீக்கத்தையும் குறிப்பனவாகும்.

சாக்கிரத்தில் இருந்துகொண்டே, பசுகரணங்களெல்லாம் சிவகரணங்களாகக், கரணங் கடந்த துரியாதீதத்திற் பயில்ப வர்கள் இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் விட்டு நீங்கிய தவ முதல்வர்கள் ஆவார்கள். இம்மையிலேயே உயிர்ப்பற்றை ஒழித்துச் சிவப்பற்றைக் கொண்ட இவர்கள் சஞ்சரிக்கின்ற சிவமேயாவார்கள். இவர்கள் மணிமுடி சூடி அரசாண்டார் களாயினும், மகளிருடன் கூடி இன்புற்றிருந்தார்களாயினும், அகப்பற்று நீங்கியவரேயாவார்கள் இவர்கள் செய்யும் தொழி லொப்புமை பற்றி இவர்களை, உலகத்தாரோடு ஒப்ப வைத்து எண்ணுதல் கூடாது.

"துறவு" என்பது, உள்ளும் புறமும் நினைப்பொழியப் பெற்றுஆசையற்றிருத்தல் உண்மைத் துறவுடையவர்களாகிய திருத்தொண்டர்களை "வீடும்வேண்டா விறலின் விளங்கினர்" என்று சேக்கிழார் பெருமான் குறித்தருளுவார். துறவிகள் தம்மையே முதலென்றும் தமது அறிவையே அறி வென்றும் தம் செயலையே செயலென்றும் கொள் ளாமல், சிவத்தையே முதலென்றும், சிவ அறிவையே அறிவென்றும் சிவச்செயலையே செயலென்றும் கொள்ளுவார்

கள், வேடமாத்திரையால் துறவைக் காட்டாது, அகப்பற்று புறப்பற்றுக்களை எல்லாம் ஒருங்கே ஒழித்துச் சர்வசங்க பரித்தியாகம் செய்த பெரியோர்களாகிய இவர்களுக்குத் தத்துவங்கள் ஏவல் செய்யுமேயல்லாது, இவர்கள் தத்துவங்களாகிய பாசாடவியினுள் புகமாட்டார்கள்.

பாசமாகிய தத்துவக் கூட்டத்தைப் பந்தமென்று உணர்ந்து, அவற்றிலிருந்து நீங்கி; உயிராகிய தன்னை அறிந்து குருவருளால் தன்னையும் பொருளன்றெனத் தெளிந்து, சிவ ஞானத்தால் சிவத்தில் அழுந்தி நிற்பவர்களுக்குத் தேக இருப்பினுல் பிராரத்த அநுபவம் வருமாயினும், அது அவர்களது உணர்வுக்கு வந்து இடையூறு செய்வதில்லை.

———

[தொடரும்]

---

உ

சிவ சிவ

## "பாராட்டு விழா"

திருமுறை வழிபாட்டு வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வரும் திரு.K.S.P.K குஞ்சிதபாதத்திற்கு பாராட்டு விழா ஸ்ரீசோமேசர் ஆலயத்தில் 21—7—76ல் M. C. S. இரத்தின சபாபதி செட்டியார் B. A. அவர்கள் தலைமையில் நடை பெற்றது. E. T. சிதம்பரம் அனைவரையும் வரவேற்றார். "சதம் கண்ட பெரியார்" D. சொக்கலிங்கம் செட்டியார் B. A. B. L. பொன்னுடைபோர்த்தி "திருமுறைச் செல்வன்" என்று பட்டம் வழங்கினர். திருவாவடுதுறை ஆதீன வித்துவான் து. சோமசுந்தர தேசிகர் வாழ்த்துப் பாமாலைபாடி வழங்கினர். M. ஞானசம்பந்தம் M. A., K Rm. S. இராமலிங்கம் செட்டியார், கவிதையாளர் அரு, வெங்கடாசலம் பிள்ளை, T P. சக்கரபாணி, இராமகிருஷ்ணன், இராம அமிர்தலிங்கம், N. K சாமிநாத முதலியார், P. G. T. பஞ்சநதம் மற்றும் பலர் பாராட்டிப் பேசி மலர்மாலை அணிவித்தனர். K.S,P.K. குஞ்சிதபாதம் தனக்கு அளித்த பாராட்டிற்கு பாமாலைபாடி அனைவருக்கும் நன்றி கூறினர்.

திருமுறைமன்றத்தார்.

குடந்தை

# "சைவ சமயத்தின் மாண்பு" (3)

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு. மதுரை ஆதீனம்.

சைவ சித்தாந்த நுட்பங்களைத் தமிழில் விளக்கும் நூல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை திருமூலர் அருளிய திருமந்திரமும், மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமும், அதனைத் தொடர்ந்து அருள்நந்தி சிவாச்சாரியார் இயற்றியருளிய சிவஞான சித்தியாரும், இருபா இருபஃதும், திருவதிகை மனவாசகங் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கமும், உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவப்பிரகாசமும், திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் இயற்றிய திருவுந்தியாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர் இயற்றிய திருக்களிற்றுப் படியாரும், வாகீச முனிவர் இயற்றிய ஞானமிருதமும் ஆகிய சாத்திரங்களாகும்.

மேற்குறித்த தமிழ் நூல்களில் கூறப்படும் உலகியல் வாழ்க்கை முறையினையும். தெய்வ வழிபாட்டு முறைகளையும், தத்துவ உண்மைகளையும் கூர்ந்து நோக்குங்கால். சைவ சித்தாந்தக் கொள்கைக்கு நாற்றங்காலாக அமைந்தது நம் தமிழகமே என்ற உண்மை நன்கு விளங்கும்,

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய, செம்மேனி அம்மானை வழிபடும் சமயம், சைவ சமயமாகும் சிவனை வழிபடும் நெறியாகிய, சைவ சமயத்தின் முடிந்த முடிபாக விளங்கும் தத்துவக் கொள்கையே "சைவ சித்தாந்தம்" என்ற பெயரால் சிறப்பித்து உரைக்கப்படுகிறது. சைவ சித்தாந்தம் என்ற பெயர் திருமூலர் காலத்திலேயே வழங்கியிருத்தல் அறியத்தக்கதாகும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்

உண்மையினை வலியுறுத்தலே சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பாகும்.

தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை முதலிய பழந்தமிழ் நூல்களை ஆராயுமிடத்துக் கட் புலனுகக் காணுகின்ற இவ்வுலகத்தைப் பற்றியும், பல்வேறு உடம்புகளுடன் கூடி, இவ்வுலகில் வாழ்வனவாகிய எண் ணிறந்த உயிர்களைப் பற்றியும், அங்கு இங்கு எனுதபடி, எங் கும் பிரகாசமாய், ஆனந்தப் பூர்த்தியாகி நின்று, உலக உயிர் களை இயக்கி அருளுகின்ற கடவுளைப் பற்றியும், இம் முப் பொருள் உண்மைகளை உணர்ந்த மக்கள், தமக்கென வகுத் துக் கொள்ளும் நல்லொழுக்க நெறியாகிய வாழ்க்கை முறை யைப் பற்றியும் அறிந்து கடைப் பிடித்தற்குரிய சிறந்த உண் மைகள் ஆங்காங்கே விரித்துக் கூறப் பெற்றிருத்தலைக் காண லாம்,

இதன் முன்னர் குறிப்பிட்டபடி, இறைவன் அங்கு, இங்கு எனுதபடி எங்கும் பிரகாசமாய் இருந்தாலும், உயிர் கள் இறைவனை அறியமாட்டாமல். பொறி புலன்களுடன் இயைந்து மயங்கியே நிற்கின்றன. இஃது எதுபோலும் என் னில், சூரியன் எவ்வளவுதான் பேரொளி பரப்பித் திகழ்ந்தா லும், பிறவிக் குருடர்கள் அதனை ஒரு சிறிதும் காண முடிவ தில்லை. அவ்வாறே, உயிர்களும் மலங்களினுல் மயங்கி அறி விழந்து, இறைவனை அறியமாட்டாமல் துன்புறுகின்றன.

''எங்கும் தான் நிறைந்து சிவனின்றுனுகில்
எல்லாரும் காணவே வேண்டுந்தானென்னில்
இங்கும்தான் அந்தகருக்கு இரவி இருள்ஆகும்
ஈசன் அருட்கண் இல்லார்க்கு ஒளியாயே இருளாம்''

என்பது சிவஞானசித்தியார்.

'' எங்கும்நீர் நீரேயாயினும் பருகுவதற்கு
ஒரு துளியும் இல்லை''

(Water, Water everywhere but not a drop to drink." — S. T. Coloridge)

என்று எஸ். டி. காலெரிட்ஜ் என்ற ஆங்கில கவிஞர் பாடு கின்ருர்.

இம்மண்ணுலகில் பிறந்திருக்கிற ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ, இன்றியமையாமைகளோ ஏற்பட்டு எங்ஙனமேனும் சமய உணர்வையும், கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன.

முடிசார்ந்தமன்னரும், மற்றுமுள்ளோரும்முடிவில்' ஒரு பிடி சாம்பராய்'' வெந்து மண்ணாகியே ஒழிகின்றனர்.

"Man! Thou art Dust and to Dust Thou Returnest"
— Shakespeare

நிலை பேறுஉடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம், முடிவில் நிலைபேறு இன்றி, அழிந்து, மறைந்து போதலை, நாம்நாள்தோறும் காண்கின்றோம். மனிதனின் செருக்கும், பெருமிதமும், முனைப்பும், பிடிவாதகுணமும், நாளடைவில் தேய்ந்து, மாய்ந்து அழிந்து போகின்றன.

ஒவ்வொரு மனிதனும், தான் எதிர்பார்ப்பது ஒன்றாக இருக்க, நிகழ்வதோ பிறிதொன்றாக அமைந்து விடுகின்றது. எத்துணை உயர்ந்த செல்வம், செல்வாக்குகளைப் பெற்றுச் சிறந்த நிலையில் வாழ்பவரும், தம்முடைய நிலையில் உள நிறைவு எய்துகின்றிலர். மனிதனின் ஆரா இயற்கை அவா மிக்கதாகத் திகழ்கின்றது. ஒரு பொருளைப் பெறுதொழிந்த வழி நேரும் துன்பம் போலவே, அப்பொருளைப் பெற்ற வழியுங் கூட, நிறைவு பெறாமல் ஏதேனும் ஒரு வகையில், மனமானது துன்புறுகின்றது. ("There are two tragedies in life: One is not to get our heart's desire; the Other is to get it? — G. B. Shah.)

அப்படி மனிதனுக்கு ஏற்படும் மனத் துன்பங்களைப் போக்கிக் கொள்ள, சமய உணர்வும், கடவுள் நம்பிக்கையுமே, பெரிதும் துணை புரிகின்றன. இறைவனை வழிபடுவதன் மூலம் நம் கவலைகள் பெரிதும் தீர்கின்றன. நாம், நமது மனத்துன்பங்களை நீக்கிக் கொள்ளுதற்குரிய நேரிய—செவ்விய வழி இறைவனின் திருவடிகளைச் சரண் அடைதல் ஒன்றே

யாகும். இவ்வுண்மையினை, இந்நாளில் உலகப் புகழ் பெற்றுள்ள மேலைநாட்டு அறிஞர்கள் பலரும் உடன்பட்டுக் கூறத் தலைப்பட்டுள்ளனர். உலகப் புகழ்பெற்ற மன இயல் நூல் அறிஞரான (Psychologist and Psychiatrist) பேராசிரியர் சி. ஜி, யுங் என்பார் பின்வருமாறு கூறுகின்றார்:—

"கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரீக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பால் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும் வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில்—அதாவது முப்பத்தைந்து வயதிற்குமேல் தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசிவழியாகத் தமது வாழ்க்கையில் சமய உணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை" என்று கூறுகின்றார்.

(During the past thirty years, people from all civilized countries of the world have consulted me...

Among all my patients in the second half of life-that is to say, over thirty five years-there has not been one, Whose problem in the last resort was not that of finding a religious outlook on life.......

-Prof. Carl Gustave Jung.)

உலகில் உள்ள சமயங்கள் பலவும் இறைவன் பாவிகளைச் சபிக்கின்றான். தீயவர்களைத் தண்டிக்கின்றான் எனப் பல செய்திகளைக் கூறக் காண்கின்றோம். இறைவன் கோபங் கொள்கின்றான். கோபங் கொண்டால் தண்டிக்கின்றான், அழிக்கின்றான் என்றே பல சமயங்கள் கருதுகின்றன. ஆனால், சைவ சித்தாந்தமோ, கடவுள் ஒரு வழியில் தண்டிக்க நேரினும், அத்தண்டனையுங்கூட, அவர்தம் அளவற்ற பெருங் கருணைத் திறத்தினாலேயே நிகழ்கின்றது என விளக்குகிறது.

உலகில் உள்ள பல தந்தையார்களும், தாயார்களும் தாம் பெற்றெடுத்த மைந்தர்கள், தம்முடைய சொற்படி நடவாமல், தவறுகள் செய்வார்களாயின், அவர்களை அடித்தும்

தண்டிப்பதுண்டு. அஃது, அவர்கள் தமது மைந்தர்களின் மீது வைத்துள்ள அளவற்ற அன்பின் காரணமாகவே அன்றிப் பிறிதொன்று பற்றியன்று.

சிறந்த மருத்துவ அறிஞர் ஒருவர், ஒரு நோயாளிக்கு மிகவும் கசப்பான மருந்தைக் கொடுத்துக் கடும் பத்தியங்களை விதிக்கின்றார். மற்றொரு நோயாளருக்கு மிகவும் சுவையான மருந்தைக் கொடுத்துப் பாலும், பழமும் உண்ணச் செய்கின்றார், வேறொரு நோயாளருக்கு, மிகவும் துயரம் தருகின்ற அறுவைச் சிகிச்சை புரிகின்றார், இஃது, அம்மருத்துவரின் விருப்பு, வெறுப்பு, பரிவு, சினம் என்பன பற்றி நிகழ்வதன்று அவ்வவர்க்குள்ள நோயின் இயல்புக்கு ஏற்ப அமைவது,

எனவே, பெருங்கருணைப் பெம்மானாகிய இறைவனின் பேரருளைப் பெறுவதற்கு, அடியார் கூட்டுறவு வேண்டும் என்பதனைச் சைவ சித்தாந்தம் பெரிதும் வற்புறுத்துகின்றது. ''அடியவர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில்லார்'' என்பது சிவஞானசித்தியார்,

(தொடரும்)


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6–00 வெளிநாடு ரூ. 10-00

**செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"**

தருமபுரம், மாயூரம் P. O.

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 31. தொண்டரின் தொண்டர்

திருச்சிற்றம்பலம்

குறியின் நான்கு குலத்தினராயினும்
நெறியின் அக்குலம் நீங்கினராயினும்
அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்
செறிவுறப் பணிந்தேத்திய செய்கையார். —குலச்சிறை நாயனூர் புராணம்

என்பது சேக்கிழார்பெருமானின் வாக்கு. அடியார்களுக்குள் குலம் பார்க்கக் கூடாது இறைவன் நாமத்தைக் கூறுவோருக்கு குலம் தரும் எனத் திருமங்கையாழ்வார் பாடியது கூட சாதியின் உயர்வைக் குறிப்பிடவில்லை தொண்டர் குலத்திற் பிறக்கும் பேறு கிட்டும் எனக் கூறியதாகும்

சைவ உலகில் சாதி பேதமும், மொழி வேற்றுமையும் கண்டால் விபரீதமாகிவிடும். பிராமணர்தான் உயர்வு என்று எண்ணினுல் இறைவனை நினைந்து உருகிய உத்தமரான அப்பர் சுவாமிகளை இழந்துவிடுவோம். ''சொற்குறுதிக்குஅப்பர்!'' என்பர். அவரை நினையாதவன் தமிழ்நாட்டில் பிறக்கவேகூடாது.

ஏனையோர் உயர்வுஎன எண்ணினேமென்ருல், நால்வரில் மூவர் நமக்கில்லாது போய்விடுவார்கள். வடமொழி வேண்டாம் என்ருல் ஐந்தெழுந்தே நமக்கில்லாது போய்விடும். மொழி வெறி, ஜாதி வெறி என்பது ஆன்மீக உலகிற்குத் தேவையில்லை ஆண்டவனை வழிபடும் அனைவரும் உயர்குலம் ஒரேகுலம் என்பதுதான் நம் கருத்தாயிருக்கவேண்டும்.

அந்தணர் குலத்திலே தோன்றி அப்பரை வணங்கி மேன்மை பெற்றவரின் அருங்கதையே அப்பூதியடிகளின் வரலாறு!

திங்களூர் என்ற தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஊரில் வாழ்ந்த பெருந்தகை அப்பூதியடிகள். அவர்காலத்தில் அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்தனர். எனினும் அப்பூதியடிகளை அப்பர் சுவாமிகளின் உழவாரத் திருப்பணி கவர்ந்தது. ஆதலின் அப்பரிடம் அன்பு பூண்டார். செல்வத்திற் சிறந்துபொய் சொல்லாது வாழ்ந்து வந்தவர். அப்பர் சுவாமிகளிடம் அவர் வைத்த அன்பு அவரால் அடக்க முடியாது வெளிப்பட்டது

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கிருப்பதுவும் நீயன்றோ பராபரமே.

என்பதுபோல் அவரது அன்பு எல்லாவற்றையும் நாவுக்கரசராகவே கண்டது. வீட்டிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் நாவுக்கரசின் பெயர் வைத்து அழைத்தார்.

அளவைகள், நிறைகோல் முதலானவற்றிற்கு நாவுக்கரசர் பெயர் வைத்ததால் தவறாக அளக்காமல் நேர்மையாக அளந்து உண்மையை நிலைநாட்டி ஒழுகலாம். உண்மையான முறையில் வியாபாரம் நடத்தவேணுமென்ற காரணத்தால், பழைய காலத்தில், அளவைகளுக்கு சிற்றம்பலக்கோல் ஆடல் வல்லான் மரக்கால் என்றெல்லாம் பெயரிடுவதுண்டு என்பர். (இன்றோ!)

நல்லபெயரிட்டழைத்ததால்ஆவும்எருமைகளும்மகிழ்ச்சியடைந்து வளமாகப் பால் சுரந்தும் வேலை செய்தும் வாழ்ந்தன. உண்மையை நிலைநாட்ட யாவற்றிற்கும் நாவுக்கரசர் பெயர் வைத்தழைத்த அப்பூதியடிகள், தமது அன்பைக்காட்டுவதற்காக மக்களுக்கும் அதே பெயரிட்டழைத்தார். இதே மாதிரி நிறையத் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து நாவுக்கரசின் பெயரிட்டார். வீட்டில் தானும் தன் மக்களும் நாவுக்கரசரின் நாமத்தை நவின்று உய்யவேண்டும் என்றும், ஊர் மக்களும் அவ்வாறே உய்யவேண்டுமென்பதற்காக தண்ணீர்ப்

பந்தர்களுக்கும் அதே பெயரிட்டழைக்குமாறு செய்தார். நாவுக்கரசரைக் காணுமலே அன்பு கொண்டு செய்தமை.

வடிவுதாங் காணுராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பிரானுர் அருளுங் கேட்டவர் நாமத்தால்
படி நிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்.

திருப்பழனம் சென்று இறைவனை வணங்கிய திருநாவுக்கரசர் திங்களூர் வந்தனர். எங்குபார்த்தாலும் தன் பெயரால் தண்ணீர்ப் பந்தல் முதலானவை அமைந்திருப்பது கண்டு ஆச்சரியமடைந்தனர்.

சிலர் தண்ணீர்ப் பந்தல்களை,கூட்டமுள்ள தெருவுகளில் ஏன் குளக்கரைகளில் கூட அமைத்துத் தன் பெயரிட்டு அதனைப் படிக்குமாறு செய்வர் ஊருக்கு வெளியில், ஜனங்கள் வேற்றூர்களுக்குச் செல்லும் வழியில், தன்பெயரில்லாது திருநாவுக்கரசர் பெயரால் செய்துள்ள தகைமையை,

அளவில் சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம் போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தரு தண்ணீர் பந்தர் வந்தணைந்தார்.

என்ற கவிதையால் வர்ணிக்கிறுர். "இத்தண்ணீர்ப் பந்தல் அமைத்தவர் யார்? என அங்கிருந்தவரைக் கேட்க, அப்பூதியடிகளையறியாதவர் தண்ணீர்ப்பந்தல் பற்றியறிந்தவர்கள் அப்பூதியடிகள் என்பவர் செய்துள்ளார். அடிக்கடி இவற்றைக் கவனிப்பதற்காக அருகிலேயே வசிக்கின்றுர்" என்றனர். திருநாவுக்கரசரும் அப்பூதியின் இல்லத்தையடைந்தார் அப்பூதியடிகளும் அவரை எதிர்கொண்டழைத்து வணங்கிஉபசரித்து "தாங்கள் யார்?" எனவினவ "திருபழனத்திலிருந்து வருகின்றேம். உமது தண்ணீர்ப்பந்தர்த் தருமத்தைக் கண்ட உம்மைக் காணவந்தோம். இறைவனது திருவடியாருக்காகத் தாங்கள் ஏற்படுத்தியுள்ள தண்ணீர்ப்பந்தலில் உங்கள் பெயர் எழுதாமல், ஏன் வேறொரு பெயர் எழுதியிருக்கின்றீர்கள்" என்றுர்"

"ஆறணியுஞ் சடை முடியார் அடியார்க்கு நீர் வைத்த
ஈறில் பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும் பேர் எழுதாதே
வேறொர் பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்?
கூறும்" என எதிர் மொழிந்தார் கோதில் மொழிக் கொற்றவனார்.

"கோதில் மொழிக் கொற்றவனார்" என்ற அடைமொழியால் அப்பரின் வாக்கில் குற்றம் வராது. அடியவரான அவர் என்றும் வெற்றியடைபவர் என்று குறிக்கப்பெறுகிறது. அப்பூதியடிகள் இது கேட்டுக் கோபமடைந்தார். ஆனாலும் கோபத்திலும் நிதானம் தவறவில்லை. **நன்றருளிச் செய்திலீர்!** என்கிறார் கோபத்தையும் வென்றுவிட்டது சிவனடியார் மீது அவர் வைத்துள்ள அன்பு! "அமணரின் சூழ்ச்சியை வென்றவரின் பெயரா வேறொரு பெயர்! **ஈசன் எந்தை இணையடி நீழலே,** என்றும், **அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை**" என்றும், "**நற்றுணையாவது நமச்சிவாயவே**" என்றும் கூறி சிவபெருமானிடத்து அன்புள்ளவர் இம்மையிலேயே உய்வடையலாம் எனக் காட்டிய பெரியவரின் திருநாமத்தை வேறொரு பெயர் என்று கூறினீர்கள்? கல்லில்மிதந்து கரையேறியகருணையாளரின் பெயரை அறியாதவர் உலகில்உண்டா? மங்கலமான சிவவேடத்துடன் பொலியும் நீர் மங்கலமில்லா வார்த்தை கூறினீர்கள்? தாங்கள் யார்? எங்கிருக்கின்றீர்?" என்றார்.

பொங்கு கடற் கல் மிதப்பில் போந்தேறும் அவர் பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே!
மங்கலமாந் திருவேடத்துடன் இன்று இவ்வகை மொழிந்தீர்
எங்குறைவீர்? நீர்தாம் யார்? இயம்பும்" என இயம்பினார்.

அடியாரின் வேடமே மங்கலமானது. அவர் வாக்கில் மங்கலமற்ற மொழி வருதல் கூடாது என்பது குறிப்பு.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகள் உண்மை உணர்ச்சியையும் அன்பையும் அறிந்தார். "சைவ சமயத்திற் பிறந்தும் அதன் பெருமையை உணரமாட்டாது, புறச்சமயம் புகுந்து சிவநிந்தனை முதலான செய்த சிறுமையை எண்ணாது, சூலை நோய் தந்து, சைவத்தின் பெருமையை உணர்த்தி ஆட்கொள்ளப்பட்ட சிறியேன் அடியேன்" என்றார். இறைவனால்

ஆட்கொள்ளப் பெற்ற பிறகும், புற சமயத்தில் செய்த தகாத செய்கைகளை எண்ணி மனவருந்தும் அப்பரின் உணர்ச்சிபட மாகவே காட்டப் பெறுகிறது

இது கேட்டு, மகிழ்ச்சியால் திடுக்கிட்ட அப்பூதியார், சிரமேற்கரங் குவித்துக் கண்களில் நீர்வார நாவுக்கரசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். ஆடிப்பாடி அகமகிழ்ந்தார் மனைவி மக்களை அழைத்துவந்து வணங்கச்செய்தார். அவரை விருந்துண்ண வேணுமென வேண்ட அப்பர் பெருமானும் இணங்கினர். அப்பூதியடிகளாரின் மனைவியார், கறி, கூட்டு முதலானவை செய்து அமுதும் சமைத்து, அப்பர் சுவாமிகள் உண்பதற்காக வாழைக்குருத்துக் கொண்டு வருமாறு, மக்களில் மூத்தவரான "மூத்ததிருநாவுக்கரசு" என்பவரை அழைத்துக்கூற, "தாய் தந்தை கூற, இவ்வருமையான காரியம் செய்யும் பேறு கிட்டியது" என மகிழ்வுடன் சென்ற அவரை வாழை மரத்திலிருந்து பாம்பு தீண்டியது. அதையறிந்து கொண்ட மகனர், விடம் உடம்பில்பூராவும் ஏறுவதற்குமுன் வாழைக் குருத்தைக் கொண்டுபோய்க் கொடுப்பேன்" என்று ஓடிச் சென்று தாயாரிடம் தந்தனர். அடியாருக்குச் சேவை செய்யும் மகனது அன்பும் இச்செய்கை மூலம் வெளியாகின்றது! தளர்ந்து வீழ்ந்த மகனுக்கு ஏற்பட்ட தளர்ச்சிகண்டு, விடம் தீண்டப்பெற்றது எனத் தாய்தந்தையர்கள் அறிந்தனர், எனினும் எக்காரியம் கொண்டும் எது நேர்ந்தாலும் அடியாரின் பூசையே மிக மிக முக்கியமானது என எண்ணி மகனை, ஒரு பாயில் சுற்றி மறைத்தனர். இதனால் தீண்டல் வராதா? என எண்ணலாம்! அப்பர் போன்ற உயர்ந்த ஞானிகளின் எதிரில் தீண்டல் என்ன செய்யும் தீண்டல்உடலளவு தானே! ஆன்மாவைப் பீடிக்காது எனக் கொள்ளவேண்டும்.

உணவு தயாராகிவிட்டது. அடியார்கள் உணவருந்துவதை மகேசுவர பூசை என்பர். அடியார்கள் உணவுண்பதற்கு முன்னும் பின்னும் திருநீறு சாத்திக்கொண்டு, பிறருக்கும் அளித்தல் வழக்கம். அம்முறையில் அப்பர் பெருமான்

தாம் நீறணிந்து கொண்டு, ஏனையோருக்கும் அளித்தனர். அப்போது மூத்த திருநாவுக்கரசு எங்கே எனக் கேட்டனர். மங்கலத் திருவேடத்துடன் வந்துள்ள அப்பர்பெருமானிடம் மங்கலமற்ற மொழி கூற விரும்பாத அப்பூதியடிகள் பொதுவாக "இப்போதிங்கு உதவான்" எனப்பொதுவாகக் கூறினர் அவர் பொய் கூறவில்லை. உண்மையைச் சுருக்கமாகக் கூறினர். இறைவன் திருவருளால் அப்பரின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. "என்னல் இதைப்பொறுக்க முடியவில்லை உண்மையை விளக்கிக் கூறவேணும்" என்றனர்.

சிவனடியார் உணவுண்ணத் தடங்கல் ஏற்படலாமோ என்ற அச்சத்தில் உண்மையைக் கூற அஞ்சியபோதிலும், பெரியவர் கேட்டால் உண்மையைக் கூறவேணுமென்ற நேர்மையுணர்ச்சியால் உந்தப்பெற்று நிகழ்ந்ததைக் கூறினர்.

பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க என்றே
வருவது? என்றுரை யாரேனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டும் சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தாரன்றே.

"இம்மாதிரி எவர் செய்வார்?" எனக்கூறிய அப்பர்பெருமான், மூத்த திருநாவுக்கரசின் உடலுக்குப்பக்கத்தில் சென்று பதிகம்பாட, விடம் நீங்கி, உறங்கி எழுபவனைப்போல அச்சிறுவன் எழுந்து, அப்பர் பெருமானின் திருவடிகளை வணங்க அவனுக்கும் திருநீறளித்தார். குழந்தை எழுந்தபோதிலும், அடியாரின் பூசனைக்குச் சிவன் இடையூறு செய்துவிட்டானே எனச் சிறிது மனவாட்டமுற்றனர். அப்பூதி தம்பதியர் அதறிந்த அப்பெருமான் உடனே அமுதுண்ண இசைந்தனர்

உணவு படைப்பதற்காக ஆயத்தங்கள் அழகாக விவரிக்கப்படுகின்றன. கோமயம்; பசுஞ்சாணம், இது சுத்தமானது திருநீறு செய்வதற்கு மூலப்பொருள். திருக்கோயிலை மெழுகுவதற்கு ஒரு சாதனம். இறைவன் விரும்பும் பஞ்சகவ்யம் (ஆனைந்து) என்பதில் பசுஞ்சானம் ஒன்றும் ஆதலின் வேதமும் இதைப் புகழுகின்றது. எனவே புகழ்ந்த கோமயம் என்றார். மாக்கோலம் (கரைத்தமாவினல்) கோலமிட்டு, தீபம்

ஏற்றி வைத்தனர். நீண்ட வாழைக்குருத்து விரித்து வைக்கப் பட்டு, நீரால் சுத்தம் செய்யப்பெற்று அரிந்த பக்கம் வலப்புற மாக இருக்குமாறு நுனி இலையை வைத்தனர் என்ற மரபும் குறிப்பிடப் பெறுகின்றது

புகழ்ந்த கோமயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்த வான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்த அக்கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம் பெற மரபின் வைத்தார்.

அப்பர் உணவுண்ட பிரசாதத்தையே உண்ண விரும்பி னார் அப்பூதியடிகள். ''குழந்தைகளும் நீரும் நம்முடன் உணவு கொள்ளுக'' என அப்பர் கூற அவ்வாறே செய்தனர்.

ஆண்டவனை விட அடியார் பெரியவர் என்று கூறுவர் ''ஈசரோ தொண்டருள்ளத் தடக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்பது ஆன்றோர் வாக்கு. அதனால் அப்பர் சுவாமிகள் அடியவரான அப்பூதியடிகள் வீட்டில் பல நாட்கள் (பன்னாள்) தங்கிவிட்டனர். பின்னர் திருப்பழனம் சென்றார்.

திருப்பழனத்தில் பாடிய பதிகத்தில் அப்பூதியடிகளைச் சிறப்பித்துப் பாடியமையால் அப்பர் பெருமான் அவரை அழைத்துச் செல்லவில்லை. கலிபுருடன் அஞ்சி நடுங்கி ஓடு மாறு சிவாக்கினி காரியத்தை தினமும் செய்யும் அப்பூதி

அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்!

எனத் திருப்பழனம் தேவாரத்தில் அப்பூதியடிகளின் திருநா மத்தை அமைத்தார் அப்பர் பெருமான்.

அன்பர்கள் விரும்புவார்கள் என்பதால், அப்பர் பெரு மான் மூத்த திருநாவுக்கரசின் விடம் நீங்க அருளிய பதிகத் தைக் கீழே தருகிறோம்.

திருச்சிற்றம்பலம்

ஒன்று கொலாமவர் சிந்தையுயர் வரை
ஒன்று கொலாமுயரும் மதி சூடுவார்
ஒன்று கொலாமிடு வெண்டலை கையது
ஒன்று கொலாமவர் ஊர்வது தானே.

பத்து கொலாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்து கொலா மெயிறுந் நெரிந்துக்கன
பத்து கொலாமவர் அவர் காயப்பட்டான்றலை
பத்து கொலாம் அடியார் செய்கை தானே.

திருச்சிற்றம்பலம்

அடியாரது திருநாமமே தனது செல்வமாகக் கொண்டு அவர்பெயரால் தண்ணீர்ப்பந்தல்முதலான வைத்துப்பெருமை யடைந்தார் அப்பூதியடிகள் என்பர் நம்பியாண்டார் நம்பி.

தனமாவது திருநாவுக்கரசின் சரணமென்று
மனமார் புனற்பந்தர் வாழ்த்தி வைத்து ஆங்கவன்வண் தமிழ்க்கே
இனமாத்தனது பெயரிடப் பெற்றவன் எங்கள் பிரான்
அனமார் வயல் திங்கள் ஊரினில் வேதியன் அப்பூதியே.

— நம்பியாண்டார் நம்பி–திரு. திருவந்தாதி–29

திருநாவுக்கரசரின் திருத்தாள்களே எல்லாம் என உணர்ந்து தில்லை நடராஜப் பெருமானின் திருவடி நீழலிற் கலந்தார் அப்பூதியடிகள்.

"ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்"

திருச்சிற்றம்பலம்

---


வரப் பெற்றுக் கொண்ட நூல் விபரம்

"தியாக பூமி" – வியாஸ பூரணிமை மலர்

நள ஆனி 26–1976 ஜூலை–9

"பண்பாட்டின் அடிச்சுவடு"

320–பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 5/–

பற்பல நாடுகளிலும் காலா காலங்களில் சிறந்து விளங்கிய எண்ணிறந்த கல்வி மேதைகள், தேசாபிமானிகள், சீர்திருத்த வாதிகள், தியாகிகள், மதாசாரியார்கள், மன்னர்கள், மந்திரிகள், பாதிரியார்கள் இன்னோரன்ன உயர்மானுடங்களின்பொன்மொழி கள் தொகுப்பும், வாழ்க்கைவரலாற்றின் குறிப்புக்களும்கொண்ட ஓர் சிறந்த நூல், ஒவ்வொரு வீட்டிலும் தவறுதிருக்க வேண்டி யதும் ஆணும், பெண்ணும் என்றென்றும் வாய்ப்புகிடைக்கும் போதெல்லாம் ஆனந்தமாகப் படித்து அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான உகந்த நூல்.

ஆசிரியரின் சேவை மிகவும் பாராட்டத்தக்கது

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு, சு. இராமலிங்கம் அவர்கள்,
கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சீகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

கோயில்
திருச்சிற்றம்பலம்

5. வருமாந்தளிர் மேனிமாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுள் சிற்றம்பல மேய
கருமானு ரியாடை கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணுதுள்ளமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது திருப்பாசுரத்திலே, பொய்ச் செல்வம் இதுவென்றும், மெய்ச் செல்வம் இதுவென்றும் அறியாத பெரியோர்களுக்கு மெய்ச் செல்வம் இதுவென்று உணர்த்தியருளிய திருஞானசம்பந்த சுவாமிகள். ஆளுவதாகிய இந்தத் திருப்பாசுரத்திலே, பொய்த் தெய்வம் இதுவென்றும் மெய்த் தெய்வம் இதுவென்றும் அறியாது புலம்புகின்ற புத்திசாலிகளுக்கு, மெய்த் தெய்வம் இதுவென்று உணர்த்தியருளுகின்றார். நாம் வாழவந்த ஞானசம்பந்தர். உலகிலே அநேகர் அதிலுங்கற்றவர்கள்கூட பிரம்மா, விஷ்ணுவையும், மாரியம்மனையும் காளியையும், கறுப்பனையும் மெய்த் தெய்வமென்று நம்பி வீணே இறந்தும் பிறந்தும் உழலுகிறார்கள். திருவாசகத்திலே' ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள், திருக்கோத் தும்பியிலே அருளிச் செய்கிறார்.

திருச்சிற்றம்பலம்

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்கன்
பொய்த்தேவு பேசிபுலம்புகின்ற பூதலத்தே

பத்தேதும் இல்லாமல் பற்றற நான்பற்றி நின்ற
மெய்த் தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்று அருளுகிருர். பிறப்புக்களில் மிகச் சிறந்ததாகிய இம் மனிதப்பிறப்பை சிவபெருமான், கருணையினல் நமக்குகொடுத் திருக்கிருர் இந்தப் பிறப்பை எதற்கு கொடுத்தாரென்னில், இனிமேல் பிறவாமலும், இறவாமலும் இருப்பதற்கேயாம். பிறவாமலும் இறவாமலும் இருக்க வேண்டுமென்னின் யார் பிறவாமல் இறவாமலிருக்கிருரோ, அவரை வணங்கினுல் பிற வாமலும் இறவாமலும் இருக்கலாம் அவர் யார் என்னில் சிவ பெருமான்ஒருவரேயாம். மற்றத் தெய்வங்களெல்லாம்பிறந்து இறந்து வேதனைப் படுகிறவர்கள் ஆவார்கள் இதற்குப் பிர மாணம் சிவஞான சித்தியாரிலே,

''யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனுர் தாம்வருவர், மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலானிவை யிலாதா னறிந்தருள் செய்வனன்றே.

அடுத்த திருப்பாட்டிலே சிவபெருமான் திருவடியை வழிபடு வது உயர்ந்த அறமென்றும் மற்றத் தெய்வங்களை வழிபடுவது வீண் செயலென்றும் அருளுகின்ருர் சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

காண்பவன் சிவனேயானுல் அவனடிக்கன்பு
செய்கை மாண்பறம் அரன்றன்பாத மறந்து
செய்யறங்க ளெல்லாம் வீண்செயல்.

என்பதால் விளக்குகிருர். சிவபெருமான் பிறப்பில்லாதவரென் பதை, சைவசமயிகளல்லாத மற்றவர்களும் சொல்லுகிருர்கள் சமணமுனிவரென்று கூறப்படுகின்ற இளங்கோவடிகள்பிரமா முதலிய தேவர்கள் அமுதத்தை உண்டுஞ் செத்துவிட்டார்கள் சிவபெருமான் நஞ்சை உண்டுஞ் சாவாமல் இருந்து அருள் புரிகின்ருர். என்று கூறுகிருர் அது விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும் உண்ணுத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய் என்பதால் விளங்கும். சிவபெருமான் ஒருவரே ஒப்பற்றவர் என்கிருர் நம்மாழ்வார். ''ஒளி மணிவண்ண னென்கோஎன்பு

தால் சிவபெருமான் ஒருவன் அதாவது ஒப்பற்றவன் என்று எல்லோரும் ஏத்துகிறார்களாம் இன்னும் திருமங்கையாழ்வார் சிவபரத்துவத்தை மிக நுட்பமாக விளக்குகிறார். அக்கருத்து வருமாறு. திருப்பாற்கடலை கடைந்தார்கள். அதில் தோன்றிய பொருள் பலவாயினும் முக்கியமான பொருள் மூன்று, அவை 1. நஞ்சு 2. அமுது. 3. பெண். இந்த மூன்றில் நஞ்சை நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானும் அமுதத்தை தேவர்களும், பெண்ணை (மகாலக்ஷிமி) மகாவிஷ்ணுவும் உண்டார்கள் என்று கூறி சிவபெருமான் விடத்தை உண்டாரென்றும் முக்கண்ணுடையவரென்றும் கூறி சிவனே இறவாதவரென உணரவைக்கிறார். அப்பாடலைக் கவனியுங்கள்.

*அண்ணல் செய்தலை கடல் கடைந்ததனுட்*
*கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே*
*விண்ணவரமுதுண வமுதில் வரும்*
*பெண்ணமுதுண்ட வெம்பெருமானே.*

என்பதால் தெளியலாம். அடுத்த பாட்டில் இன்னொரு கருத்து என்னெனில் சிவபெருமான் திரிபுரத்தை எரித்தபொழுது அவர் மேருமலையை வில்லாகவும், திருமாலை அந்த வில்லுக்கு அம்பாகவும் கொண்டாரென்று கூறி வில்லும் அம்பும் பிடித்திருப்பவராகிய சிவபெருமானுக்கு அடிமையென்றும் அவரே தலைவரென்றும் உணர வைக்கிறார், இதோ அக்கருத்துள்ள பாடல் வருமாறு

*குழல்நிற வண்ணநின் கூறுகொண்ட*
*தழல் நிறவண்ணன் நண்ணார் நகரம்*
*விழநனியலை சிலை வளைவு செய்து அங்கு*
*அழல்நிற அம்பதுவானவனே.*

என்பதால் ஆழ்வார்களே சிவன் பெருமையை விளக்குகிறார்கள். 'பிறப்பிலிபிறப்பிலி' என்கிறார் வில்லிபுத்தூராழ்வார். இப்படி புறச்சமயத்தவர்களும், பிறப்பிறப்பில்லாதவர் சிவபெருமானொருவரே என்று கூறுகிறார்கள். திருஞானசம்பந்தர் சிவபெருமானைத் தவிர வேறு தெய்வங்களை நல்லவர்கள் வணங்கமாட்டார்கள் என்று கூறுகிறார். 'கல்லால் நீழலல்

லாத் தேவை நல்லார் பேணுர் அல்லோம் நாமே' திருநாவுக்கரசர்.

செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப்பாறைகட் கேறுமோ
அத்தனென் றரியோடு பிரமனும்
துத்தியஞ்செய நின்ற நற்சோதியே என்றும்
நூறுகோடி பிரமர்கள் நுங்கினர்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலாதவனீசனெருவனே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள். 'விரும்பேன் உன்னையல்லால் ஒரு தெய்வம் என் மனத்தால்' மாணிக்கவாசகர் 'மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது' என்றும் 'உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே.

'கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேனுயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்'

எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே.

புற்றில் வாளரவு மஞ்சேன் பொய்யர்த மெய்யுமஞ்சேன்
கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே,

(திருவாசகம்)

அறிவுடைப் பத்தரிலக்கணம் கூறப்படுகிறது அது. 'இத் தெய்வநெறி நன்றென்றிருள் மாயப்பிறப்பறு இந்திரசாலப் பொய்த்தெய்வநெறி நான்புகா வகை புரிந்த புராண சிந்தாமணி வைத்த மெய்த்தெய்வநெறி நான் மறையவர் வீழி மிழலை விண்ணிழி செழுங்கோயில் அத்தெய்வநெறியிற் சிவமலாது அவமும் அறிவரோ அறிவுடையோரே, திருமந்திரத்திலே. சிவனேடொக்குந் தெய்வந்தேடினுமில்லை அவனோடொப்பாரிங்கு யாவருமில்லை என உறுதியாகக் கூறப்படுகிறது பதினேருந் திருமுறையிலே நக்கீரர் இயற்றிய கோபப் பிரசாதத்தைக் கூர்ந்து கவனியுங்கள். அதில் சிவபெருமானைத் தவிர வேறு தேவர்களை மெய்த்தேவரென்றெண்ணி ஏத்து

கின்ற அறிவில்லாதவர்களை இன்றே கொண்டு போகாமலி ருக்கிறனே எமன். அந்த எமன் பேரில் மிகத்தவறு இருக் கிறது என்கிறார் கந்தபுராணத்திலே. சிவபெருமான் ஒரு வரே பரம்பொருளாகிய பதியென்றும் மற்றவர்களெல்லாரும் பசுக்களெனப்படும் உயிர்களென்றும், ததீசிமுனிவர் கூறு கிறார்.

ஆதலால் எங்கள் ஈசனே பரம்பொருள் அல்லா
ஏதிலா ரெலாம் உயிர்த்தொகையாகுமால் இதனைக்
காதலால் உரைத்தேன் அன்று வாய்மையே காண்டி
வேதமே முதலாகிய கலையெலாம் விளம்பும்,

அவருடைய திருநாமத்தாலே சாதாரண மனிதர்களுக்கும் விளங்கும் சிவன் எனும் நாமந்தனக்கேயுடைய செம்மேனி யெம்மான் என்று அப்பர் சுவாமிகள் அருளுகிறார். மற்றவர் கள் எல்லாம் சீவர்கள் என்பதில் சிறிதுஞ் சந்தேகமில்லை. பசுபதி, மகாதேவன், தேவதேவன் என்னுந் திருநாமங்களும் அவரது உயர்ந்த நிலையையும் மற்றையோர்கள் தாழ்ந்த நிலை யையும் இனிது விளக்குகிறது. இன்னும் உலக வழக்கிலே எவன் செத்தாலும் சிவன் சாகமாட்டான் என்னும் பழ மொழியும் அவர் சாவாமையையும் மற்றவர்கள் சாவையும் விளக்கிக் கொண்டிருக்கிறது. திருப்பாற் கடலிலே விஷம் வந்தபொழுது அவர் உண்ணுவிடில் பிரமா முதலான தேவர் களெல்லாம் அப்பொழுதே இறந்திருப்பார்கள் என்கிறார் மாணிக்கவாசகர்.

"கோலாலமாகி குரை கடல் வாயன்றெழுந்த
ஆலாலமுண்டானவன் சதுர்தானென்னேடி
ஆலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

காளமேகப் புலவர் ஆலங்குடி என்னும் சிவத்தலத்திற குச் சென்றார். அங்குள்ளவர்களைப் பார்த்து சுவாமியின் திரு நாமம் என்ன வென்று கேட்டார், அதற்கு அவர்கள் ஆலங் குடியான் என்றார்கள். உடனே மிக வேகமாக பாடுகிறார்.

வெண்பா

ஆலங்குடியானை ஆலாலமுண்டானை
ஆலங்குடியா னென்றார் சொன்னார்

ஆலங்குடியா னேல்வானுங்குவல யமுமெல்லோமும்
மடியாவோ முற்றெருங்கு மாய்ந்து.

என்னும் பாடலைக் கவனித்துப் படியுங்கள் சிவபெருமானுடைய கழுத்துக்கறுப்பாகாவிடில் தேவமாதர்களுடைய கையும் மார்புஞ் சிவந்திருக்குமாம் என்று குமரகுருபர சுவாமிகள் கூறுகிறார் பாடல் வருமாறு.

மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்றுளாடும்
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற்றம்மா
நாயகன் கண்டங்கறுதே லந்நாட்டமரர்
சேயிழை மாதருக்குச் செங்கைகளும் கொங்கைகளும் சிவக்கும்
போலும்,

என்னும் பாடல் எவ்வளவு உண்மையும் நயமும் விளக்குகிறது. காஞ்சிப் புராணத்திலே ஒரு அற்புதப் பாடல்.

''அடுங்கால மிதுவென்ன விடமெழலு நனிவெருவியயன்
மாலேனேர்
கொடுங்காலன் றனைக்குமைத் தகுரைகழற் கீழ்ச்சரண்
புகுதக் கொதித்து வாழ்நாள்
பிடுங்காமலருள் புரிந்த பிரானன்றிப் பின்னையுமோர்
பிரானுண்டென்ன
நடுங்காதார் தமைக்காணப் பெற்றிடினு மென்னுள்ள
நடுங்குமாதோ

தாயுமான சுவாமிகள் ஐயனே யுனையன்றியொரு தெய்வம். கையினல் தொழவுங் கருதேன் கண்டாய் என்றும்

தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
நைவரென்பதும் நற்பரதற்பர
சைவசிற்சிவனே யுனைச்சார்ந்தவர்
உய்வரென்பதும் யானுணர்ந்தே னுற்றே,

இந்தப் பாடல் மிக அருமையானது. இத்தனை கருத்துக்களும் பொதிந்து கிடக்குமாறு புகலிவித்தகர்.

கருமானுரியா டைகறை சேர்கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணுதுள்ளமே,

என்னும் அற்புதத் திருவாக்கை நினைக்குந் தோறும் எனும்பெல்லாம் இனிக்கிறது கருமான் என்பது யானை. யானை

வடிவமுள்ள அசுரன். யுத்தத்திற்கு பிரமா முதலானவர்கள் தோற்றுப் போய் ஒளிந்து கொண்டபடியால் கைலாசத்திற்கு சென்றான். அங்கு அவனை சிவபெருமான் தோலை உரித்து போர்வையாக போர்த்திக்கொண்டார். உலகத்திலே எல்லாச்சாமியும் ஒன்றுதான் என்று கற்றவர்கள் உபதேசம் செய்து வருகிறார்கள். மற்றவர்களும் உண்மைதான் என்று கேட்கிறார்கள். அவர்கள் தங்களைத் திருஞானசம்பந்தசுவாமிகளை விடப் பெரியவர்கள் என்று எண்ணியிருப்பார்களோ? அறியோம். நால்வர் பெருமக்களாகிய சமயாசாரியர்கள் இந்த உலக முய்யச் சிவபெருமான் அனுப்ப இங்கு எழுந்தருளி உண்மை தெரியாமல் மயங்குகின்ற நமக்கு தெளிவித்து உண்மையை அறிவிக்க வந்தவர்கள் அவர்களுடைய சொல்லை கேட்பவர்கள் உய்வாரென்பதும் கேளாதவர் உய்யாரென்பதும் உறுதி உறுதி உறுதி. வருமாந்தளிர் மேனி மாதை ஒரு பாகத்தில் வைத்து உலகத்திற்கு இன்பமும் முத்தியும் வணங்கினவர்களுக்கு கொடுக்கிறார். அரசன் ஒருவனே அவன் கீழ் சிற்றதிகாரிகள் பலபேர் இருப்பது போல சிவன் ஒருவனே மால் முதலாகிய எல்லாருக்கும் அரசர். மற்றையோர்கள் அவராணைப்படி வேலை பார்க்கும் அதிகாரிகள். ஆகவே பிறப்பிறப்பு நீங்க வேண்டுமானால் பிறப்பிறப்பில்லாத சிவபெருமானைச் சார்ந்து சரியை கிரியாயோகஞான தவங்களைச்செய்து பிறப் பிறப்பை நீக்கி கொள்ள வேண்டும். அப்படியல்லாமல் கண்ணில்லாதவனொருவன் கண்ணில்லாதவனை துணையாகப் பற்றிச் சென்றால் இருவரும் குழியிலே விழுந்து கெட்டு விடுவது போல பிறப்பிறப்பிலே மொத்துண்டலையும் நாம் பிறப்பிறப்புக்களையுடைய விஷ்ணு முதலாகிய தேவர்களைச் சார்ந்தால் பிறப்பிறப்பு நிச்சயமாக நீங்காது திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பெருமான் கழலல்லாற் பேணதுள்ளமே என்ற அற்புதவாக்கை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையிலே.

> வம்பருவரி வண்டு மணம்நாற மலரும்
> மதுமலர் நற்கொன்றையான் அடியலாற்பேணு
> எம்பிரான் சம்பந்தன்.

என்று அருளிச் செய்துள்ளார்.

சைவர்களாக சிவதீக்ஷை பெற்ற பெரியோர்கள் திருஞானசம்பந்தர் திருவாக்கின்படி நடந்து அவர்கள் மீது அன்பு கொண்டு ஒழுகாவிட்டால் அவர்களுக்கு தீக்ஷை பூசை முதலியவற்றாலும் பலன் சித்திக்காது என்பது உறுதி. நால்வர்களுடைய வாக்கு சிவவாக்கேயாம், ஆகவே அவர்கள் திருவடிக்கு அன்பரானால் சிவனுக்கு அன்பர்களாவர்ர்கள் அல்லாதவர்கள் அன்பராக மாட்டார்கள்.

அருணகிரியந்தாதி என்னும் நூலிலே ஒரு பாடல்.

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக் கொண்டாடேன்
அறந்தழைக்குஞ் சோணகிரியாரே பிறந்திறவா
உம்மைப் புகழ்ந்தே யுமக்கடிமையானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற்றான்.

என்னும் பாடலையுஞ் சிந்தித்து சிவபெருமானே மெய்த்தெய்வமென்று தெளிந்து அவரைச் சார்ந்து பிறப்பிறப்பையகற்றி பிழைத்துய்வோமாக.

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க.

(தொடரும்)

# "மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம் உரை விளக்கம்"

"செந்தமிழ்ச் செல்வன்"
புலவர் திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

67—76 ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!
அன்பர்க்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர் வார்தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!

**உரை விளக்கம்:** தெவிட்டாத அமுதமே! அளவுக்கு அடங்காத பெருமையை உடையவனே! ஆராய்ந்து தியானிக்காதவர்களின் உள்ளத்தில் வெளிப்படாமல் மறைந்து விடுகின்ற ஞானமாகிய ஒளியாகத் திகழ்பவனே! நீர் போல என் நெஞ்சத்தை உருகச்செய்து, என் உயிர்க்குயிராய் நிற்பவனே! இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டும் இயல்பாக இல்லாதவனே! உயிர்களின் பொருட்டு அவை இரண்டும் உள்ளவனே அன்புடையவர்களுக்கு அவர்களிலும் மிக்க அன்பை உடையவனே! எல்லாப் பொருள்களுமாய், அவையல்லாது வேறுமாய் நிற்கும் சோதி வடிவினனே! செறிந்த இருளாக இருப்பவனே! எளிதில் விளங்காத பெருமை உடையவனே!எல்லாவற்றிற்கும் முதலாக இருப்பவனே! முடிவும் நடுவும் ஆக விளங்கி அவை அல்லாதவனுமாகத் திகழ்பவனே! வலிய இழுத்து என்னை அடிமை கொண்ட எம் தந்தையாகிய பெருமானே! கூரிய மெய்யறிவினால் அன்பு கொண்டு உணர்பவர்கள் தமது மனத்தினாலும் நோக்குதற்குரிய நோக்கமே! நுட்பமாக உணர்வதற்கும் இயலாத நுட்பமான உணர்வே

77—83 போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம்காவலனே! காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா மிக்காய் நின்ற

தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான ஊண் ஆர் அமுதே! உடையானே!

**உரை விளக்கம்:** இறப்பும் பிறப்பும் வாழ்தலும் இல்லாத புண்ணியப் பொருளே! எல்லாவற்றையும் எல்லோரையும் காத்தருளும் எங்கள் அரசனே! காண்பதற்கரிய பெரிய ஒளியே! ஆறு போலப் பெருகும் இன்பமாகியவள்ளலே! அப்பனே, யாவர்க்கும் மேலானவனே! நிலைபெற்ற அழகுமிக்க சுடரும் ஒளியாயும், சொல்லுதற்கு இயலாத நுண்ணிய உணர்வாயும் மாறுபட்டுக் கொண்டே செல்லும் இவ்வுலகத்தின் கண் வேறு வேறாக வந்து, அறிவாயும் விளங்கித் தெளிவைத் தருபவனே! ஊற்றை போலச் சுரக்கின்ற உண்பதற்கினிய அரிய அமிழ்தம் போன்றவனே! எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உரிய தலைவனே!

84—95 வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா! அரனே! ஓஎன்று என்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்: சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**உரை விளக்கம்:** வேறு வேறு மாறுபாடுகளை அடைகின்ற, தசையாலாகிய இவ்வுடம்பின் உள்ளே அடைப்பட்டுக் கிடத்தலை, இனியும் யான் பொறுக்க மாட்டேன். எங்கள் தலைவனே! தீவினைகளை அழிப்பவனே! எனக்கு அடைக்கலம் என்று, அலறிக் கதறிப் போற்றியும் புகழ்ந்தும் தியானத்தில் இருந்து, பொய்ம்மைகள் அழிந்து மெய்யருள் நிலையைப்பெற்றவர்கள், மறுபடியும் இவ்வுலகின் கண் வந்து வினை வயப்பட்ட பிறவியை அடையாதபடி, வஞ்சகம் மிகுந்த ஐம்புலன்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# ENGLISH TRANSLATION OF TAMIL LITERATURES

*Prof: V. PERUMAL*, M.A B.T. M.R.A.S.
K. G. F. First Grade College,
Oorgaum, Kolar Gold Field
(Mysore State)

(Continved from 368 of vol 27)

Mr. V.V.S Iyer's English translation of Thirukkural is also characterized by clarity of thought.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்! (427)

He has rendered this couplet into English in the following clear language:

'The man of understanding knoweth what is coming: but the fool foreseeth not what is before'.

(4) A translation must be comprehensive and cover the full meaning of the original passage or poem In other words, the full significance of the original must be translated in a perfect manner.

---

(முன் பக்கத் தொடர்ச்சி

களின் கூடாகிய இவ்வுடம்பின் கட்டினை அழிக்கவல்லவனே! நடு இருளிலே இடைவிடாமல் நடனம் இயற்றும் தலைவனே! தில்லைச்சிற்றம்பலத்தில் கூத்தாடுபவனே! தெற்கே உள்ள பாண்டி நாட்டை உடையவனே! துன்பத்தை விளைவிக்கின்ற பிறவியின் வேரை அறுப்பவனே! உனக்கு அடைக்கலம்என்று அரற்றி, அளவிட்டுச் சொல்ல முடியாத புகழை உடையவனை இயன்ற அளவும் புகழ்ந்து துதித்து, அவனது திருவடிக் கீழ் இருந்து சொல்லிய சிவபுராணம் என்னும் இச்செய்யுளின் பொருளை உணர்ந்து ஓதவல்லவர்கள், சிவபுரமாகிய திருக்கயிலைக்குச் செல்வார்கள். அங்கே தம்மைப் பலரும் புகழ்ந்து போற்றத் தாம் சிவபிரானைப் பணிந்து, அவனது திருவடியின் கீழ் இன்புற்று இருப்பார்கள்,

(சிவபுராணம் உரை முற்றும்)

Dr. B. Natarajan has rendered Thirumantiram into English. His translation is characterized by such a feature.

அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியும் குணமும் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தோணி யாமே. (Thirumantiram5:53)

The above verse has been rendered into English by Dr. Natarajan in the following lines:

'The Lord is of Infinite Grace,

In His Celestial City are Love, Light and Peace eternal, To them that seek to know His Form.

And understand His Attributes
And attain His Holy Feet
–To them, this is the path
–This, this the boat to cross Life's turbulent waters.

Rajajji's translation of Thirukkural is another good example of such a feature.

'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்' (637)

Following is his translation of the above couplet; 'Besides being well-versed in the methods of action, one should also understand the current ways of the world and act suitably.'

(5) It is the duty of the translator to closely follow the original writer regarding the order of the ideas. In other words, the morphological aspect of thought found in the original must remain unaltered in the translation. Thiruvachakamani K. M Balasubramaniam, who has rendered Thiruvachakam into

English has maintained in his translation the same apple pie order of thought found in the original.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்!'

(Thiruvachagam:Sivapuranam: 26–31)

Following is the translation (of Mr. Balasubramaniam) of the above stanza:–

'The **grass** and **herb** and **worm** and **tree,**
The diverse **beasts.** the **bird** and **snake**
The **stone** and **man,** the **ghoul** and **ghosts,**
The mighty **demons, sages** and **gods;**
Among these **static** and **mobile**
Forms of all species of life,
I've been born and wearied, my Lord.

Similarly he has translated the following stanza without altering the order of ideas;

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

(Thiruvachagam: 15)

Following is the translation of the above stanza;

"The **sky** and **earth**,the **wind** and **fire,** the **body** and the **soul,** The **being** and the **non-being** Thou art, Thou the kind bidest Causing every one to dance like puppet and to say.

"I and **Mine**"!What words shall I speak out and how hail Thee?"

(6) Simplicity is one of the main criteria of a good translation. A translation must be absolutely free from high sounding bambastic language, and pedantic expression Mr. T. B Krishnaswamy, who translated the Ten Tamil Ethics (Athichudi, Kontrai-Venthan, Ulaga Neethi, Vetri–Verkai (Narunthogai) Muthurai, Nalvazhi, Nanneri, Neethineri Vilakkam, Neethi Venba, and Aranericharam) followed a simple style of expression. The following are a few examples of his translations;

"ஞயம்படவுரை" (Athichudi: 17)

Speak sweetly.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" (Kontrai Venthan: 2)

Very good it is to worship at a temple.

"நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்"

Do not wilfully tell a lie. (Ulaganeethi: 2)

"அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்" (Vetriverkai: 14)

Self–control after study and thought, is a virtue of the wise.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே — நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று" (Muthurai: 3)

It is pleasant to see good people: pleasant to listen to their good words: pleasant too to speak of their goodness; to associate with them is also pleasant.

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி" (Nalvazhi: 2)

Correctly stated, there are on this earth only two castes, those who give in consonance with an unerr-

ing moral code are noble: those who give not, are low. This is as set forth in the best books.

> "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
> கொள்ளும் குணமே குணமென்க — வெள்ளம்
> தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
> விடுத்த லரிதோ விளம்பு" (Nanneri: 8(

The power to control one's wrath that rises violently up, is of real worth: is it more difficult to build up a dam to hold back the floods or to break it down?

> "மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
> அனைத்தெவையும் தியவேயாகும் — எனைத்துணையும்
> தியவே செய்யினும் நல்லவாக் காண்பவே
> மாசின் மனத்தி னவர்" (Neethinari vilakkam: 58)

Angry minds receive even good deeds as evil, but spotless minds receive even the worst of evils as good.

> "ஒருபோது யோகியே யொண்டீ ளிர்க்கை மாதே
> இருபோது போகியே யென்ப — திரிபோது
> ரோகியே நான்குபோ துண்பான் உடல் விட்டுப்
> போகியே என்று புகல்' (Neethivanba: 9)

Who eats once observes displine; who eats twice may be said to en'oy himself; Who eats thrice is sickly; you may say for certain he who eats four meals will quickly die.

> "இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
> வன்சொல் களைகட்டு வரய்மை எருவட்டி
> அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
> பைங்கூழ் சிறுகாலைச் செய்" (Aranaricharam: 16)

with sweet words as the fruitful soil, with gifts as seeds, with harshness weeded out, manuring with truth and watering with affection raise betimes the crop consistiug of sheaves of virtue.

---

(தொடரும்)

சிவ சிவ]

# ஊக்கமும் - ஆக்கமும்

திருமதி, ப. உமாதேவி அவர்கள்,
9/49 திரௌபதியம்மன் கோயில் தெரு
அரியாங்குப்பம்—புதுவை-7

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாங்கள் இறக்கும் வரை ஏதேனும் ஒரு துறையில் ஈடுபாடு கொண்டவர்களாய் உள்ளனர். ஆயினும் வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுக் கூடம், அதில் ஊக்கத்துடன் முன்னேறுவோர்க்கு வெற்றி கிடைக்கின்றது. அந்த வெற்றியானது செய்யப்படும் செயலுக்கு ஏற்ப, எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கேற்ப கிடைக்கின்றது. அதாவது ஊக்கத்தின் அளவீடாக அதன் ஆக்கமும் அமைகின்றது

**ஊக்கமும் ஆக்கமும்:**

குளத்தில் உள்ள நீர்மட்டம் உயர்ந்து இருப்பின் அந்த உயரத்திற்குத் தக்கஅளவில் தாமரையின் தண்டு நீண்டு நீர்ப் பரப்பில் இலைகளையோ, மலர்களையோ தாங்கிக் கொண்டு இருக்கும், நீர்மட்டம் குறைந்திருப்பின் தண்டும் உள்ளே வளைந்து சுருண்டு தன் நீளத்தைச் சமன்படுத்திக் கொள்ளும், அதுபோன்றே ஒருவனுடைய முயற்சிக்கேற்பபலன் கிடைக்கும், கடின முயற்சி செய்து, ஓயாத உழைப்பால் பலன் அடைந்தால் அந்த பலன் அதிக அளவில் அமைந்து மன நிறைவு கிடைக்கக் கூடியதாய் இருக்கும், தண்ணீர் மட்டத்திற்கேற்ப தாமரைத் தண்டின் நீளம் இருப்பது போலவே ஊக்கத்தின் அளவே ஆக்கமும் இருக்கும் என்பதை வள்ளுவர்,

> வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனையது உயர்வு.

என்று குறிப்பிடுகின்றார். மேலும் ஊக்கமுடையானிடம் ஆக்கும் வல்லமை இருப்பதால் திருவருள் துணை நிற்கும்.

இதனை அடியார்களின் சரிதங்களின் மூலம் அறியலாம் ஊக்க முள்ளவன் பிற்காலத்தில், காலப் போக்கில் எல்லாப் பொருட்களையும் இழந்தானுயினும் கவலைப்படமாட்டான். அசையாத ஊக்கம் அவனிடம் இருப்பதால் ஆக்கம் அவனிடம் செல்லும் வாழ்வும் வளம் பெறும்.

*ஆக்கம் அதர்வினைச் செல்லும் அசைவிலா*
*ஊக்க முடைய னுழை.*

என்று குறிப்பிடுகின்றது குறள், அசைவிலா ஊக்கத்தைப் பெற்றவன் எறும்பைப் போல் சுறுசுறுப்புடன் உழைக்கக் கூடியவனுக இருப்பான். அப்படிப்பட்டவன் எதற்கும், எந் நிலையிலும் கைப் பொருள் இழந்து எளிய நிலையில் நின்றுலும் வருந்தமாட்டான். அதற்குமாருக இழந்ததைவிட இருமடங்கு பொருள் சேர்க்க எண்ணி முன்னிலும் கடுமையாக உழைக்க ஆரம்பிப்பான்.

*ஆக்கம் இழந்தேமென்று அல்லாவர் ஊக்கம்*
*ஒருவர் தம் கைத்துடை யார்'*

என்னும் திருவள்ளுவரின் கூற்றுக்கு எடுத்துக் காட்டாகவே இருப்பான். எனவே ஊக்கம் வந்தவழி இன்ன செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற துணிவுடன் கூடிய உறுதி மனத்தில் பிறக்கின்றது. அதன் வழி ஆக்கமும் நிகழ்கின்றது.

**ஊக்கமும் முயற்சியும்:**

ஊக்கம் மனதில் பிறந்தவுடன் முயற்சி தானே ஏற்படு கின்றது. செயலில் ஊக்கம் கொண்ட காரணத்தால் அது வெற்றிபெற எல்லா முயற்சிகளேயும் செய்கின்றனர், அவ்வாறு முயலும் போது அவர்கள்,

*மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி*
*அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்*
*கருமமே கண்ணு யினுர்.*

என்னும் பாடலுக்குச் சிறந்ததோர் எடுத்துகாட்டாகத் திகழ் வர் அந்த முயற்சி வெற்றிதரும் என்பதில் எள்ளளவும் ஐய மில்லை. இவ்வாறு முயற்சியில் ஈடுபட்டு உழைக்கும் போது,

மேற் கொண்ட துறைக்கேற்ப அறிவுச் செல்வமோ, அருட் செல்வமோ, பொருட் செல்வமோ கிடைக்கின்றது. அதன் நிழலாகப் பெரும் புகழும் பின்னால் வந்தடைகின்றது இதனால் வாழ்வும் வளம் பெறுகின்றது முயற்சியுள்ளோரிடம் திரு மகள் தங்குகின்றாள். அல்லாதவரிடம் மூதேவி வாழ்கின்றாள், இதனை வள்ளுவர் அழகாக,

*மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்*
*தாளுளாள் தாமரை யாள்.*

என்று கூறுகின்றார்.

**ஊக்கமும் ஈகையும்:**

முயற்சியினால் பொருள் சேர்ந்துவிட்டது. அதனை முறை யுடன் பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்தினால் செல்வத்தை மீத்து வைக்க முடியும். அப்படி சேமிக்கும் பொருளை அறவழிகளில் செலவிட முன்வர வேண்டும், தனக் குப் பயன்பட்டது போக மிகுதியானவற்றை அறவழிகளில் செலவிட வேண்டும், தானங்களில் சிறந்தது அன்னதானம் வறியவனின் பசி தீர்ப்பதனால் வரும் பெரும் பயனைவிட உலகில் சிறந்த பயன் வேறு எதுவுமில்லை, அதனால்தான் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று சிறப் பிக்கப்படுகின்றனர். பசி வந்திடப் பத்தும் பறந்து போம், அந்த பத்து எவை யெவை என்பதைக் கீழ்வரும் பாடல்குறிப் பிடுகின்றது

*மானங் குலங் கல்விவன்மை அறிவுடமை*
*தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை—தேனின்*
*கசிவந்த சொல்லியர் மேற்கா முறுதல் பத்தும்*
*பசி வந்திடப் பறந்து போம்.*

என்று கூறுவதால் வறுமையின் கொடுமையும், அதன் உடன் பிறப்பானப் பசியின் தன்மையையும், ஆற்றலையும் நன்குணர முடிகின்றது. இவற்றைக் காக்கப் பசிப்பிணியை அகற்ற உண வளிக்க வேண்டும். அப்படிச் செய்வதே செல்வத்தைச்சேமிக் கும் பாதுகாப்பான இடமாகும் என்று எடுத்துரைக்கின்றது குறள்,

*அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள் வைப்புழி.*

ஈகையின் வாயிலாக அவன் ஈட்டுவதும் பெரும் புகழாகும், அந்தப் புகழ் நிலையானது. உடலுக்கு அழிவுண்டு, ஆனால் புகழுக்கு அழிவில்லை. இம்மையில் புகழையும், மறுமையில் இன்பத்தையும், உயர்வையும் கொடுக்கக் கூடியது. அதுஊழி ஊழிதோறும் நின்று நிலவுவது, அந்த வாழ்க்கை வாழ்பவரே பெரும் பேறு பெற்றோர். அந்த புகழாகிய இசையில்லாமல் வாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்வல்ல, கடையெழு வள்ளல்களை உலகம் மறக்காமல் இருக்கக் காரணம் அவர்களின் ஈகைத் திறனே மூலகாரணம் ஆகவே அந்த வாழ்வினை,

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

என்றும் கூறிச் சிறப்பித்துள்ளார் வள்ளுவர்.

---


ஸ்ரீ சண்பகாம்பிகா சமேத ஸ்ரீ திருவேட்டீசுவரர்
திருக்கோயில் ஜீர்ணோத்தாரண

## நூதன இராஜகோபுர

## மகா கும்பாபிஷேகம்

இறைவன் திருவருளால் நிகழும் அனல வருஷம் ஆவணி மாதம் 20-ஆம் தேதி (5—9—1976) ஞாயிற்றுக்கிழமை காலை 5.15 மணிக்கு மேல் 6.45க் குள்ளாகச் சிம்ம லக்கினத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். ஒரு கும்பாபிஷேக தரிசனம் நூறு அசுவமேதயாகம் செய்த பலனைத்தரும். என்று சாஸ்திரங்கள் கூறும்.

ஆகவே இந்தக் கும்பாபிஷேகம்நன்கு நிறைவேற அன்பர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்வதோடு, திரள் திரளாக வந்து கும்பாபிஷேகத்தைத் தரிசித்து இறைவன் திருவருளைப் பெற வேண்டும் என்று வேண்டுகிறோம்.

ஸ்ரீ திருவேட்டீசுவரர் தேவஸ்தானம்,
சென்னை-5

381

**உயர்மானுடம் – 12**

# "பிராணாயாமம்"

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி எம். ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

மிக உயர்வான பொருள் பற்றி நான் துணிந்து எழுதப் புகுந்துள்ளேன். அதற்கு தகுதி எனக்கு உண்டா என்பது பற்றி நான் எண்ணிப் பார்க்கிறேன். மனம் கூசத்தான் செய்கிறது. நல்லவைகளை எண்ணுவதற்கோ செய்வதற்கோ சில விடங்களில் தகுதிகள் தடையாக இருக்கக்கூடாது என எண்ணுபவன் நான். உயர் மானுடத்தின் உயிர்நாடியாக உள்ள 'பிராணாயாமம்' என்னும் உயர்ந்த தலைப்புப் பற்றி மேலோட்டமாக இங்கே சில சொல்ல இருக்கிறேன்.

'பிராணாயாமம்' என்ற தலைப்பைக் கண்டதும் இது யாரோ யோகிகளுக்கு, அல்லது வயோதிகர்களுக்கு என எண்ணி ஒதுக்கிச் செல்வோரும் உண்டு பொதுவாககட்டுரைகள் எல்லாப் படித்து இன்புறுவதற்காகத்தான் என்றுஎண்ணுவோரும் உண்டு. உயர்மானுடம் என்ற தலைப்பில் நான் எழுதி வந்துள்ள, எழுதி வரும் கட்டுரைகள் எல்லாவுமே செயலில் படிப்போர் பின்பற்ற வேண்டும் என்பதற்காகத் தான். சிலருக்காவது பின்பற்றவேண்டும் என்னும் முயற்சியைத் தூண்டினால் அதுவே போதுமானது சில வாசகர்கள் பின்பற்றி வருவது போன்று சில கடிதங்கள் வந்துள்ளன.

இறைவனை அடைவதற்கு அல்லது மேலான வாழ்க்கை அடைவதற்கு 'பக்தி மார்க்கம்', 'யோக மார்க்கம்', 'ஞான மார்க்கம்' போன்ற நெறிகளை ஏற்படுத்தியுள்ளார்கள். மாணிக்கவாசகர், சுந்தரர் போன்ற அடியவர்கள் பக்தி மார்க்கத்திலும், திருமூலர் போன்றவர்கள் யோக மார்க்கத்திலும், தாயுமானவர், வள்ளலார் போன்றவர்கள் ஞான மார்க்கத்திலும் சென்று நிறைவுபெற்றுள்ளார்கள். உயர்மானுடக்

கட்டுரைகள் யோக மார்க்கத்தையும் ஞான மார்க்கத்தையும் சார்ந்தவைகளாக அமைந்துள்ளன.

'பிராணயாமம்' என்றவுடன் யாரும் பின்பற்றுவதற்கு அருமையான ஒரு வித்தை என்ற எண்ணமே பலரிடமும் விளங்கி வருகிறது. பிராணயாமம் எல்லோராலும் எல்லா வயதினராலும் பின்பற்ற தக்க ஒரு யோகமேயாகும். எல்லோரும் அதைப் பின்பற்றி சக்திகளையும். இன்பங்களையும் பெற வேண்டும்.

மனித உடலை ஆராய்ந்த முன்னோர்கள் உடலை அன்ன மய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ் ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்று விளக்கியுள் ளார்கள். நமது உடல் நாம் உண்ணும் உணவிற்கு ஏற்பவே அமைந்திருக்கிறது; நாம்ஏற்றுக்கொள்ளும் மூச்சுக் காற்றிற்கு ஏற்பவே அமைந்துள்ளது; எண்ணங்களுக்கு ஏற்பவே அமைந் துள்ளது; என்பது போல விளக்கியுள்ளார்கள்.

நமது உடலின் இயக்கத்திற்கு அடிப்படை பிராணன் தான் நம்முடைய வாழ்க்கையையே இத்தனை மூச்சுவிடும் காலம் என நம் முன்னோர்கள் கணக்கிட்டுள்ளார்கள். ஒரு மனிதனுக்கு இத்தனை கோடி மூச்சு ஆயுள் என்று தீர்மானித் துள்ளார்கள். மூச்சு விடுவதற்கு ஆகும் காலத்தை மூச்சுப் பயிற்சியால் அதிகப்படுத்திக் கொள்ள முடியும். ஒவ்வொரு மூச்சிற்கும் மிகச்சிறிய அளவுகாலத்தை அதிகரிக்கும்பொழுது ஆயுள் மிக நீண்டுவிடும். அதிகப்பேச்சு, புணர்ச்சி, நோய், ஓசையிடல், ஊதல், கோபதாபங்களில் ஈடுபடும் பொழுது அதிகமான மூச்சு வீணாகி விடுகிறது. இதனால் ஆயுள் குறை வதாகக் கூறும் பழக்கம் சாதாரண மக்களிடமும் உள்ளது.

பிராணயாமத்தால் முயற்சியாளர் பெறவேண்டியவை:-

1) பிணிகளைத்தடுத்தல், ஆரோக்கியம் பெறுதல், ஆயுளை அதிகரித்துக் கொள்ளுதல்.

2) புலன்களையும் மனதையும் சிரமப் பொறுமையால் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல்

3) இயல்புக்கு எதிரான முன்னேற்ற அடக்குமுறையால் மனதை ஆளும் இச்சாசக்தி (Will Power) பெறுதல்

உடல் நலனுக்கு எளிய பிராணுயாமம் மிகவும் தேவை என்பதை மகாத்துமா காந்தியடிகள் ஆரோக்கியத்தின் திறவுகோல் என்ற நூலில் விளக்கியுள்ளார். சுவாமி விவேகானந்தர் சிறந்த சித்தயோக வாழ்க்கைக்கு பிராணுயாமம் எவ்வளவு முக்கியம் என்பதை 'ராஜயோகம்' என்ற நூலில் மிக ஆழமாக விளக்கியுள்ளார். 1975 ஜுன் மாத கலைக்கதிர் இதழில் மதுரைப் பல்கலைக் கழக முன்னுள் துணைவேந்தர் டாக்டர் தெ.பொ. மீனுட்சிசுந்தரனுர் சிறந்த சிந்தனையாளராக யோகாசனமும், பிராணுயாமமும் துணை புரிவதாகக் கூறியுள்ளார். சாதாரணமாக ஏதாவது ஒன்றை நம் நினைவுக்குக் கொண்டு வர முற்படும் பொழுது நம்மை அறியாமல் நாம் நம்முடைய மூச்சை ஆழமாக இழுத்து அடக்கிப்பின் சிந்திப்பதை கவனிக்கலாம். இன்னும் சிலநேரங்களில் நம்மை அறியாமலே ஆழமாக மூச்சிழுப்பதோடு ஒருமூக்கில் விரலை வைத்துக்கொண்டு சிந்திப்பதுகூட உண்டு.

சிந்தனை வளர்ச்சிக்கு, மனக் கட்டுப்பாட்டிற்கு, உடல் நலனுக்கு பிராணுயாமம் எவ்வளவு பலன் அளிக்கிறது என்பதை அதில் ஈடுபட்டுப் பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும். பிராணுயாமம் செய்து அதன் சிறந்த பலனை அனுபவித்தவர்கள் ஒருக்காலும் அதை விட்டுவிடமாட்டார்கள். இக்கட்டான சூழ்நிலை வரும்பொழுது, கோபாவேசம் ஏற்படும் பொழுது, கடினமான பிரச்சனைக்கு தீர்வுகாண முற்படும் பொழுது பொறுமை வேண்டுமென நினைக்கும் பொழுதெல்லாம் பிராணுயாமம் செய்வதே எனக்கு சமயசஞ்சீவி மருந்தாகப் பயன்பட்டுவருகிறது.

## பிராணுயாமம் செய்யும் முறை

பிராணுயாமம் என்பதே ஆழமான மூச்சுப் பயிற்சியும் அதனேடு முயற்சி எண்ணங்களைச் சேர்த்துச்சிந்திப்பது தான்.

எளிய பிராணுயாமம் செய்வதை நான்கு நிலைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். இதில் மூக்கின் இரு துவாரங்களை களையும் மாறிமாறிப் பயன்படுத்தவேண்டும்.

### முதல் வகை

1) வலது மூக்கை ஒருவிரலால் அடைத்துக் கொண்டு இடது மூக்கால் காற்றை உள்ளே சுகமாக இழுக்கவேண்டும். இதை மனதிற்குள் சாதாரணமாக 1,2,3,4,5,6 என்று எண்ணும் காலம் வரைச் செய்யவேண்டும்.

2) இடது மூக்கை ஒரு விரலால் அடைத்துக் கொண்டு வலது மூக்கால் ஆறு எண்ணும் காலம் வரை சிறிது சிறிதாக வெளியே விடுதல்வேண்டும். பின் வலதுமூக்காலேயே முன் சொன்னபடி மூச்சை இழுத்து இடது மூக்கால் வெளிவிட வேண்டும். பின்இடதுமூக்கால்காற்றைஉள்இழுக்கவேண்டும்.

இவ்வாறு மாறி மாறி ஆழமாகச் செய்யவேண்டும் 6 எண்ணிக்கையை 8, 10, 12 என்று உயர்த்திக் கொண்டே செல்லவேண்டும். இவ்வாறு ஒரு தடவைக்கு 10 பயிற்சி முதல் 20 வரை செய்யலாம். ஒருநாளைக்கு இரண்டுதடவை செய்யலாம்.

### இரண்டாவது வகை

முதல் வகையில் கூறியுள்ளபடியே மூச்சை இழுத்து, உள்ளிழுத்த அதே அளவு நேரத்தளவு உள்ளேயே மூச்சை வைத்திருந்து விடுதல்தான் இந்தநிலை.

1) 6 எண்ணிக்கை வரை மூச்சை உள்ளே இழுத்தல்.

2) இருமூக்கையும் அடைத்து அதே 6எண்ணிக்கைவரை மூச்சை உள்ளேயே வைத்திருத்தல்.

3) வலது மூக்கைத் திறந்து அதே 6 எண்ணிக்கையில் மூச்சை சீராக வெளியே விடுதல்

இதிலும் கால அளவை ஆறு எண்ணுதல் என்ற நிலையிலிருந்து உயர்த்திச் செல்லலாம். ஒருநாளைக்கு காலை 10, மாலையில் 10 ஆகச் செய்யலாம்.

### மூன்றாவது வகை

1) ஆறு எண்ணிக்கை மூச்சை உள்ளே இழுத்தல்.

2) ஆறுஎண்ணிக்கையில்மூச்சைவெளியேசீராகவிடுதல்.

3) பிறகு 6 எண்ணிக்கை வரை மூச்சை இழுக்காமல் அப்படியே இருத்தல்.

பின் அதே வலது மூக்கால் மூச்சை இழுத்து இடது மூக்கால் விட்டு 6 எண்ணிக்கை காலம் மூச்சு இழுக்காமல் இருந்து மாறி மாறிச் செய்யவேண்டும் இதைப் படிப்படியாக உயர்த்திச் செல்லவேண்டும்.

நான்காவது வகை

1) 6 எண்ணிக்கை வரை மூச்சை உள்ளே இழுத்தல்.

2) 6 எண்ணிக்கை வரை மூச்சை உள்ளேயே வைத்திருத்தல்.

3) 6 எண்ணிக்கை வரை மூச்சை மெதுவாக வெளியே விடுதல்.

4) 6 எண்ணிக்கை வரை மூச்சு இழுக்காத நிலையில் இருத்தல்.

இதிலும் இழுக்கின்ற, உள்ளே வைத்திருக்கிற, வெளியே விடுகிற இழுக்காதிருக்கிற காலத்தை கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்திச் செல்லலாம். ஒரு மூச்சுப் பயிற்சிக்கும் அடுத்த மூச்சுப் பயிற்சிக்குமிடையில் தாராளமாக ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

காற்ேறோட்டமும் அமைதியும் உள்ள இடத்தில் பிராணயாமம் செய்வதே சிறந்தது பத்மாசனத்தில் அமர்ந்து செய்வதே நல்லது. நேராக சாதாரணமாக நன்முறையில் அமர்ந்த வண்ணமும் செய்யலாம்

மூச்சினை உள்ளே இழுக்கும்பொழுது பிராண சக்தியை வீரியத்தை உள்ளே இழுக்கிறோம் என்ற நினைவுடனும், காற்றை உள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் பொழுது புலனடக்கத்தை வேண்டிக் கொண்டும், காற்றை வெளியிடும் போது தீய சக்திகளை, மாசுகளை வெளியே தள்ளுவதாகவும் மூச்சினை இழுக்காமல் இருக்கும்பொழுது முயற்சியை நாடியும் மனதைச் செலுத்துவது முக்கியமானது.

பிராணுயாமம் செய்ய முனேவோருக்கு ஆத்திரமோ, அவசரமோ சிறிதும் கூடாது. மிகுந்த நிதானம் மிக மிக முக்கியமானது. பெருமையாக தன்னேப்பற்றி நினேத்துக் கொள்ளுவதோ வெளிவேஷம் போடுவதோ கூடாது.

பிராணுயாமம் செய்து முடித்த பின் சாதகனின் உடல் காற்றுப்போலவும், சக்தி நிரம்பியதாகவும், சாந்தி நிறைந்ததாகவும், உற்சாகமாகவும் இருக்கும். உடலில் வலி, கொட்டாவி, களேப்பு, சோம்பல், உடல்பாரம் இருந்தால் செய்த பிராணுயாமம் சக்திக்கு அதிகமானது எனத்தெரிந்துகொள்ள வேண்டும்.

பிராணுயாமம் செய்கிறவனுக்கு அதிகஉணவோ, அதிகத் தூக்கமோ, அதிக ஓய்வோ தேவையில்லே. அவன் வீரம், ஞானம், சக்தி, சாந்தி, சமாதானம் உடையவனுக இருப்பான் நினேத்த நேரத்தில் தூங்கவும், தூக்கத்தை வெல்லவும் அவனுல் முடியும். நினேத்த கலேயை திறனே அடையவும்முடியும்.

சாதாரண மூச்சுப் பயிற்சியை எல்லோரும் பழகி உடல் நலமும், நீடிய ஆயுளும் பெறலாம் என்றுல் கூட பிராணுயாமத்தை ராஜயோகத்தின் நான்காவது படியாக உணர்ந்து செய்வதே சிறந்தது. முதல் மூன்றுபடிகள் 1)இயமம், 2)நியமம், 3) ஆசனம் என்பதை மறத்தல் கூடாது. இவை அஹிம்சை, சத்தியம், பிறர்பொருள் வெஃகாமை, பிரமச்சரியம் போன்ற ஒழுக்கங்களும், தினக் கடமைகளே குறிப்பிட்ட நேரத்தில் செய்வதும், ஆசனங்கள் செய்வதும் ஆகும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இந்திய ஞானிகள் பிராணுயாமத்தின் நுட்பங்களே மிகச் சிறந்த முறையில் கூறியுள்ளார்கள். மேலே நாட்டவர் இப்பொழுதுதான் ஆழ்ந்த மூச்சு (Deep Breathing) மிக அவசியம் என்று கூறிவருகிருர்கள்.

பழக்கத்திஞல் மார்பை விரிவாக்காமலும், வயிற்றை உள்ளே இழுக்காதும், மூக்கை விரல்கொண்டு அடைக்காமலும் கூட நினேத்த மூக்குத் துவாரத்தால் ஆழமான பிராணு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# சேக்கிழாரும் சேயிழையார்களும் (2)

'சிவநெறித் தவமணி'
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை.
54, ஜடாமுனி கோயில் மேலச்சந்து, மதுரை.

## அறம் வளர்த்த அம்மை

எல்லா வளங்களும் பொருந்திய தொண்டை நன்னாட்டின் தலைநகரம் காஞ்சி மாநகரம். உமாதேவியார் உயிர்களிடத்துக் கொண்ட பெருங் கருணையினால் முப்பத்திரண்டு அறங்களைப் புரிந்து கொண்டே அந்நகரில் எழுந்தருளியிருக்கும் பெருமையினையுடையது இத்தலம் ஐம்பெரும்பூதங்களுள் பிருதிவித் தலம் எனப்பெறும் முத்தித் தலம் ஏழு, அவற்றுள் இத்தலம் முதன்மை பெற்றது.

ஆறு சமயங்கட்கும் தலைவியாகிய உமையம்மைஇத்தலத்தில்தான் சிவபெருமானை வழிபட்டு அவர் தந்தருளியஇருநாழி நெல்லைக் கொண்டு வேளாண் மரபினருக்கு அருளினர்.

அகிலாண்ட கோடியீன்ற அன்னை பராசக்தியை நாம் முதலாவதாகப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அடியார் நடுவுள் இருப்பவர் இறைவன் என்றால் இறைவியும் அடியார்களின் நடுவுள் இருப்பவர்தானே. "எத்திறம் ஈசன் நிற்பன்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

யாமத்தைச் செய்யமுடியும். இன்னும் எத்தனையோ மிக அதிசயங்களை நல்ல ராஜயோகச் சாதகனால் செய்யமுடியும்.

நோயின்றி வாழவும், நல்லறிவும், மனத்தெளிவும் மனச் சாந்தியும் பெற எல்லோரும் தங்களால் ஆன அளவு பிராணயாமம் செய்வது நல்லது.

குறிப்பு: இக்கட்டுரை எழுதுவதற்கு 1) பெங்களூர் ஸ்ரீசுந்தரம் அவர்களின் 'ராஜயோகம்' என்ற நூலும்; 2) திரு.எஸ். நவராஜ்செல்லையா எம்.ஏ.டி.பி.இ. அவர்களின் 'பயன்தரும் யோகாசனப் பயிற்சிகள்' என்ற நூலும் உதவியாக இருந்தன.

அத்திறம் அவளும் நிற்பள்'' என்பது ஞான சாத்திரமல்லவா? அடியார்களுக்கு அருள் புரிவதற்காக இறைவன் அருள் திருமேனி கொள்ளும் பொழுதெல்லாம், இறைவியும் அவ்வத் திருமேனி கொள்வர்.

திருக்கயிலையில் இறைவன் உலகுயிரெல்லாம் வாழ, சிவாகமங்களை அருளிச் செய்ய, அம்மையார் கேட்டருளினர். அதில் சிவபூசையின் மகிமையை இறைவன் உரைத்தனர். இதனைக் கேட்ட அன்னை சிவபூசை செய்யக் காதல் கொண்டனர்.

*எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்*
*உண்மையாவது பூசனைஎன உரைத்தருள*
*அண்ணலார்தமை அருச்சனை புரிய ஆதரித்தார்*
*பெண்ணினல்ல ளாயின பெருந்தவக் கொழுந்து.*

என்பது சேக்கிழார் வாக்கு.

இறைவன் விருப்பு வெறுப்பற்றவனும், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவனும் ஆவான். அப்படியிருக்க இறைவன் தன்னை உயிர்கள் பூசிக்க வேண்டும் என்று சிவாகமத்தில் உரைக்கலாமோ என்று கேட்கலாம்.

உண்மை இன்பம், சிவப்பேருகிய பேரின்பமேயாகும், மற்றைய சிற்றின்பம் துன்பத்தோடு கூடியதும் நிலையற்றதும் ஆகும். உலகியலிலே அனுபவிக்கும் சிற்றின்பமுங்கூடயாரிடமிருந்து பெறுகின்ருமோ, அவரிடத்தில் அன்பு இருந்தாலன்றி ஏற்படமாட்டாது, அன்பிலைலன்றி இன்பம் பெற முடியாது என்பதை அனுபவத்தில் உணர்த்தவே இறைவன் உயிர்களை ஆணும் பெண்ணுமாக இல்லறத்திலே ஈடுபடுத்துகிருன்.

அப்படியிருக்க, உயிர்கள் எல்லாம் உண்மைஇன்பமாகிய பேரின்பம் பெற வேண்டுமேயாயின், அதனை அளிக்க வல்ல இறைவனிடத்தில் ஆராக் காதல் கொண்டு பூசித்தாலன்றி அதனைப் பெற முடியாதல்லவா? அதனுலேயே உயிர்கள்மேல் வைத்த பெருங் கருணையினுலேயே ஆன்மாக்கள் தன்னைப் பூசிக்க வேண்டுமென்று ஆகமங்களில் உரைத்தருளினது தம் பொருட்டு அன்று என்று நாம் உணர வேண்டும்.

இதனை சேக்கிழார்பெருமான் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்திலே தனது வாக்காகக் கீழ்வருமாறு அருளுகின்றார்.

நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி
நிரந்தரம் திருவாக்கினில் நிகழ்வது
அஞ்செழுத்து மேயாக ஆளுடைய அம்மை
செம்மலர்க் கைகுவித் தருளித்
தஞ்சமாகிய அருந்தவம் புரியத்
தரிப்பரோ அவள் தனிப்பெருங் கணவர்
வஞ்சநீக்கிய மாவின் மூலத்து வந்து
தோன்றினர் மலைமகள் காண.

எவ்விதத்தாலும் தணிக்க முடியாத, மூண்டெழும் காதல் உடன்பெருக உமையம்மையார் ஆகம விதியால் இறைவனைப் பூசனை செய்யத் தொடங்கினார். திருச்சேடியர்கள் பூக்குடலை கொண்டு உடன் செல்ல, தன் திருவடியிணைகள் நிலந்தோய நடந்து சென்று அம்பிகாவனமாம் திருநந்தவனத்தில் தூய மலர்களைக் கொண்டு வந்தார். கம்பையாற்றின் கரையினில் தூய தீபங்களை அமைத்துக் கொண்டு சிவாகமங்களில் விதித்த படியே சிவபூசை செய்தார், அவ்வாறு தினந்தோறும் செய்து வந்தார்.

சிவபெருமான், அவரது அன்பில் மூழ்கித் திருவிளையாடல் ஒன்று நிகழ்த்தத் திருவுளம் பற்றினார். கம்பாநதி, கடலெனப் பெருகிற்று. அவ்வாறு பெருகிய வெள்ளம் இறைவனது திரு மேனிமேல் வாரா வண்ணம், அம்மையார் தமது திருக்கரங் களினால் தடுத்தார். இறைவனது திருச்செயல் தடுக்க வல்லதோ? வெள்ளம் மேலும் பெருகியது. காமாக்ஷியம்மை யார் பெருமானையும், தன்னையும் வெள்ளம் கொள்ளாமல் அவரைத் தழுவிக் கொண்டார். அவருடைய வளையல்அணிந்த கரங்களுக்கும், திருமுலைகளுக்கும் மெத்தென்றிருக்கும் படி யாகத் தன் திருமேனியைக் குழைவித்து அருளினார் சிவபெரு பெருமான், கம்பாநதி வெள்ளம் தணிந்தது: இறைவன் மீது அம்மையாருடைய வளைத்தழும்பும் திருமுலைகளின் தழும்பும் ஏற்பட்டது. இதனை சேக்கிழார்,

பூதியாகிய புனித நீருடிப் பொங்கு கங்கை
தோய் மடிச்சடை பனைந்து

காதில் வெண்குழைந் கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்
ஆதி தேவனுராயும் மாதவஞ் செய்அவ்
வரங்கொலோ வகில மீன்றளித்த
மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு!
வளைத் தழும்புடன் முலைச் சுவடணிந்தார்.

என்று வருணிக்கிருர். மெய்ப்பயன் என்ருல் உண்மையான பயன் என்றும், திருமேனியின் பயன் என்றும் பொருள் கொள்ளலாம். வளைக்கரமும், திருமுலையும் பதிபும் படியாக இறைவன் தனது திருமேனியைக் குழைவித்தது ஈண்டு அம்மையாரின் திருமேனியின், பயன் எனவும் கொள்ளலாம். இவ்வாறு திருமேனியின் பயன் கொடுத்துத் தனது மணவாளக் கோலத்தினை இறைவன் அம்மையாருக்குக் காட்டி ''வேண்டும் வரங்களைக் கேட்க'' என்று அருள் செய்தார். அதற்கு எம்பிராட்டி இன்னும் எனது பூசனை முடியவில்லையே என்ருராம். அதற்கு இறைவன், ''மாறிலாத நின்பூசனை நம்பக்கல் என்றும் முடிவில்லாததாய் நித்திய பூசையாகும்'' என்றருள் செய்தனர். அதன் பின்னர் அம்மையார் இறைவனிடத்தில் மூன்று வரங்கள் நம்பொருட்டுக் கேட்டருளினுர்.

முதலாவது இப்பூசையை என்றும் நிலையாகத் தேவரீர் மகிழ்ந்து கொண்டருள வேண்டும்,

இரண்டாவது ஈடில்லாத இப்பதியினுள் எல்லா அறங்களையும் நான் செய்ய வேண்டும்.

மூன்ருவது இப்பதியிலுள்ளார் திருவடிப் பிழைத்தல் என்னும் ஒன்றைத் தவிர மற்றெல்லாம் பிழைகளையும் பொறுத்து மாதவப் பயனையும் கொடுத்தருள வேண்டும் என்பதாகும், பிழைப்பனுகிலும் திருவடிப் பிழையேன் என்பது சுந்தரர் திருவாக்காகும், இறைவனும் மகிழ்ந்து வரமளித்தார்.

இப்புராணத்தினுல் சிவபூசையின் பெருமை நன்கு விளங்குகிறது, சிவபூசையானது சிவாகமங்களின்படி செய்வதோடன்றி மனேவாக்குக் காயங்கள் ஒன்றித்து அன்போடு செய்ய வேண்டியதாகும். ''ஒன்றியிருந்துநினைமின்கள்உந்தமக்குஊனமில்லை'' என்பது தேவாரம்.

சிவபூசையைத் தவம் எனவும், சிறந்த புண்ணியம் எனவும் கூறுவர்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்இறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின் றாரே.

என்பது திருமந்திரம் சிவபூசை அன்போடு நாளும் செய்கின்றவர் உள்ளமே இறைவன் குடியிருக்கும் கோயிலாகும்.

சகமலா தடிமையில்லை தானலால் துணையுமில்லை
நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி
முகமெலாம் கண்ணீர்வார முன்பணிந்தேத்தும்தொண்டர்
அகமலால் கோயில்லை ஐயன் ஐயா றனார்க்கே.

— தேவாரம்.

பனைக்கை மும்மத வேழமுரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ. — தேவாரம்.

இத்தகைய உண்மைகளை அகிலாண்ட கோடியீன்ற அன்னையே உலகுயிர்க்கெல்லாம் முதல் குருவாய் நின்று பூசை செய்து காட்டி உலகிற்கு உபதேசித்தருளுகின்றார், உலகில் ஆண் பெண் ஆகிய எல்லா உயிர்களுக்கும் இறைவன் ஒருவரே பேரின்பம் தரும் வள்ளல் ஆவார். எல்லா உயிர்களுக்கும் பேரின்பம் துய்ப்பது இறைவன் ஒருவனிடமேயாம். எனவே அம்மையாயிருந்து அவரும் பூசை செய்து காட்டினார்.

அதனாலேயே அம்மையார் இப்புராணத்தில் "உலகை ஆளுடையார்" "உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி" "பிறப் பொழிப்பாள்" "அந்தமில்லறம் புரப்பவள்' என்றெல்லாம் போற்றப் பெறுகின்றார்.

———

(தொடரும்)

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள்—உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

125. திருநல்லூர்ப் பெருமணம் — பண்: அந்தாளிக்குறிஞ்சி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில்
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

சொற்பொருள்: தொண்டர் நல்லூர்ப் பெருமணம்மேய—தொண்டர்கள் வாழும் திருநல்லூரில் உள்ள பெருமணம் என்னும் கோவிலில் எழுந்தருளியுள்ள; நம்பானே—விருப்பத்திற்குரிய இறைவனே; இல—இல்லறத்திற்குரிய ஒழுக்கம்; மெய் யாய்த்து—உண்மையாக வந்து சூழ்ந்தது; (அதனால்) பல்லூர்ப் பெருமண்—பல ஊர்களை உடைய பெரிய நிலவுலகில்; அம்பு ஆட்டும்—காமனின் அம்புகள் துன்புறுத்தும்; கல் ஊர்ப்பு எரு மணம்—மலைபோல் வருத்துவிக்கின்ற பாசக் கூட்டம்; வேண்டா—இனி எமக்கு வேண்டுவதில்லை; மலம் கழு(வு)—பிறவிப் பாசங்களை நீக்குவாயாக; சொல் ஊர்ப் பெரும—புகழின் நிறைவினை உடைய பெருமானே! நம் அலர் சூடு—எமக்கு மலர்ப் பாதங்களைச் சூட்டுவிப்பாயாக.

கல்—மலை; ஊர்ப்பு—வருத்துவி; எரு—மலங்கள்; பாசங்கள்; மணம்—கூட்டம்; கழவு என்பது கடை குறைந்து நின்றது. பெரு மண் அம்பு ஆட்டும் எனப்பிரிக்க இல் + அ = இல்ல, இல இல்லறத்துக்குரிய வாழ்க்கை, சொல்—புகழ்; ஊர்—நிறைவு; பெரும நம் சூடு அலர் எனப் பிரிக்க பெரும நம் என்பது எதுகை நோக்கிப் பெருமணம் என்றாயிற்று. ஊர்ப் பெயர் நல்லூர்; கோயில் பெயர் பெருமணம். நம்பு-விரும்பு; நம்பான்-விருப்பத்திற்குஉரியவன், நல்லூர்பெருப் பெருமணம் தற்போது ஆச்சாள்புரம் என வழங்குகிறது. இவ்வூரில் திருமணம்கொண்ட ஞானசம்பந்தர் மனைவியும் சுற்றமும் தொண்டர் கூட்டமும் சூழத் திருக்கோயிலை அடைந்து “பெருமண நம்பானே! இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே! பிறவிப் பாசம் தீர்த்தருள்க; மலர்ப்பதம் சூட்டியருள்க” என்னும் கருத்தில் இப்பதிகம் அருளிச் செய்தார். இப்பதிகத்தை ஓத வல்லார்க்குப் பழிபாவம் அறும்; மேலும் அவலம் இலராவர். இப்பதிகம் அருளியதும் சோதி தோன்றியது அதனுள் யாவரும் புகுக என்று சொல்லி நமச்சிவாயப் பதிகத்தையும் அருளிச் செய்தார்.